بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْد

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 7

இதழ் 25

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

துல்கஅதா 22 - ஹிஜ்ரி கமரி 1443 ★ இஹ்ஸான் 23 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 23 ஜுன் 2022


## அல்லாஹ்வின் கட்டளை

قُلْ مَنْ يُّنَجِّيْكُمْ مِّنْ ظُلُمٰتِ الْبَرِّ وَالْبَحْرِ تَدْعُوْنَهٗ تَضَرُّعًا وَّخُفْيَةً ۚ لَئِنْ اَنْجٰنَا مِنْ هٰذِهٖ لَنَكُوْنَنَّ مِنَ الشّٰكِرِيْنَ

**பொருள் :**

நீங்கள் நிலத்திலும், கடலிலும் உள்ள இருளில் சிக்கி(ய சமயத்தில்) எங்களை இதிலிருந்து காப்பாற்றினால் நிச்சயமாக நாங்கள் நன்றி செலுத்துவோராகி விடுவோம் என்று பணிவாகவும், மறைவாகவும் அவனை அழைத்துக் கொண்டிருக்கும் தருணத்தில் உங்களை மீட்பவன் யார்? என்று நீர் (அவர்களிடம்) கேட்பீராக.

(அல்அன்ஆம்:64)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## கேளுங்கள்! திருக்குர்ஆன் என்ன கூறுகிறது? إِنَّمَا يَتَقَبَّلُ اللّٰهُ مِنَ الْمُتَّقِيْنَ

**அல்லாஹ் இறையச்சமுடையவர்களின் துஆக்களை ஒப்புக் கொள்கிறான்.**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து……

அல்லாஹ் இறையச்சம் உடையவர்களின் துஆக்களை ஒப்புக் கொள்கின்றான். நாங்கள் நிறைய துஆ செய்தோம். அதனால் எந்த விளைவும் ஏற்படவில்லை என்று ஏராளமான மக்கள் கூறுவதை நான் கேட்டுள்ளேன். மேலும் அந்த முடிவு அவர்களை நாத்தீகர்களாக்கிவிட்டது. அசல் விஷயம் என்னவென்றால் ஒவ்வொரு விஷயத்திற்கும் சில விதிகளும் சில சட்டங்களும் உள்ளன. அதே போன்று துஆவிற்கும் விதிகளும், சட்டங்களும் வரையறுக்கப்பட்டுள்ளன. எங்களது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படவில்லை என்று சில மக்கள் கூறுவதற்கு காரணம் இதுவே ஆகும். அதாவது துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கு அவசியமான விதிமுறைகளையும் படித்தரங்களையும் அவர்கள் கருத்தில் கொள்வதில்லை.

தன்னிகரற்ற மற்றும் விலை மதிப்பற்ற கருவூலத்தை அல்லாஹ் நமக்கு முன்னால் வைத்துள்ளான். நம்மில் ஒவ்வொருவரும் அதை அடைய முடியும். அதை எடுத்துக் கொள்ள முடியும். ஏனென்றால் அல்லாஹ்வை வல்லமை மிக்க இறைவனாக ஏற்றுக் கொண்டுவிட்டு, அவன் எதனை நமக்கு முன்னால் வைத்துள்ளானோ மேலும் எதனை நமக்கு காட்டித் தந்துள்ளானோ அவற்றை கானல் நீராகவும், ஏமாற்றுதலாகவும் கருதுவது ஒருபோதும் ஆகுமானதல்ல. ஒவ்வொரு மனிதனும் அந்த கருவூலத்தை பெற்றுக் கொள்ள முடியும். அல்லாஹ்விடத்தில் எதற்கும் குறைவில்லை. அனைவருக்கும் அந்த கருவூலத்தை அவன் வழங்க முடியும். அதன் பிறகும் அதில் குறைவு ஏற்பட முடியாது.

சுருக்கமாக, அவன் நமக்கு நபித்துவ சிறப்புகளை கூட வழங்குவதற்கு தயாராக உள்ளான். ஆனால் அதனை பெறுவதற்கு நாம் முயற்சியும் செய்யவேண்டும். எனவே நினைவிற் கொள்ளுங்கள். துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்ற கோணத்தில் கூறப்படுபவை ஷய்த்தானிய எண்ணமும், ஏமாற்றுதலும் ஆகும்.

அசல் விஷயம் என்னவென்றால் அவர்கள் துஆ ஒப்புக் கொள்ளப்படுதவதற்கான ஒழுங்குமுறைகளையும், காரணிகளையும் முற்றிலும் அறியவில்லை. பின்னர் விண்ணின் வாசல்கள் அவர்களுக்காக திறக்கப்படுவதில்லை. கேளுங்கள் திருக்குர்ஆன் என்ன கூறியுள்ளது?

இதன் தொடர்ச்சி 11-ஆம் பக்கம்…

## நபிமொழி

**வியாபாரத்தில் சஹாபா பெருமக்கள் முழுமையாக நேர்மையுடன் செயல்பட்டார்கள்.**

2059 : ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மக்களிடம் ஒரு காலம் வரும். அப்போது தனது வருவாய் ஹலாலா அல்லது ஹராமா? என்பதை மனிதன் பொருட்படுத்தமாட்டான்.

விளக்கம்; ஹஸ்ரத் ஸய்யது ஸய்னுலாபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்; எவர் தனது வியாபாரத்தில் ஹலால் மற்றும் ஹராமை பொருட்படுத்தமாட்டாரோ அவரது வியாபாரத்தில் பரக்கத் ஏற்படுவதில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மேற்கண்ட (ஹதீஸில்) முன்னறிவிப்பு செய்துள்ளார்கள். அதாவது ஒரு காலம் வரும். அப்போது ஹலால் மற்றும் ஹராம் பொருட்படுத்தப்படாது. சஹாபி பெருமக்கள் வியாபாரத்தில் முழுமையான நேர்மையை கடைபிடித்து வந்தார்கள். அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தர்பிய்யத்தின் விளைவாக இருந்தது.

(ஸஹீஹ் புகாரி தொகுதி 4; பாடம் வியாபாரம்-காதியான் வெளியீடு 2008)

## எறும்புகளிடம் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த அமைப்பு உள்ளது. அதே போன்று தேனீக்களிடமும் பெரும் மகத்துவ மிக்க அமைப்பு உள்ளது.

وَاَوْحٰى رَبُّكَ اِلَى النَّحْلِ اَنِ اتَّخِذِىْ مِنَ الْجِبَالِ بُيُوْتًا وَّمِنَ الشَّجَرِ وَمِمَّا يَعْرِشُوْنَ

(அந்நஹ்ல்:67)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள் :

விலங்குகளைப் பற்றிய ஆராய்ச்சிகளில் தேனீக்கள் மற்றும் எறும்புகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் மிகவும் பரந்துபட்டவையாகும். எறும்புகளிடம் முக்கியத்துவம் வாய்ந்த அமைப்பு உள்ளது என்பதும், அவை கைகளால் பணி செய்கின்றன என்பதும், மனிதர்களைப் போன்று தமது சடலத்தை பாதுகாக்கின்றன என்பதும் அந்த ஆராய்ச்சிகளில் நிரூபணமாகியுள்ளது. அவை தானியக் குவியலை சேகரித்து வைக்கின்றன. குளிர் மற்றும் வெப்ப காலத்திற்கென்று தனித்தனி தங்குமிடங்களை கட்டுகின்றன. ஒரு வகையான புழு உள்ளது. அதிலிருந்து ஒரு பொருள் வெளிப்படுகின்றது. அது எறும்புகளுக்கு பாலாக பயன்படுகிறது. அந்தப் புழுக்களை தமது வீட்டில் சேகரித்து வைத்து தமது உணவிற்கான ஏற்பாட்டை எறும்புகள் செய்கின்றன. அதே போன்று தேனீயின் அமைப்பும் மிக மகத்துவமான அமைப்பு ஆகும். சில வல்லுநர்களின் எண்ணத்தின் படி மனிதர்களின் அமைப்பை விட அவற்றின் அமைப்பு சிறப்பானதாக உள்ளது. சில விஷயங்களில் மனிதர்களைக் காட்டிலும் அவற்றின் உணர்ச்சிகள் அதிகமாக உள்ளது. அவற்றின்

இதன் தொடர்ச்சி 11-ஆம் பக்கம்…

## இந்த இதழில்


- திருக்குர்ஆன்
- நபிமொழி
- மல்ஃபூஸாத்
- தஃப்ஸீரே கபீர்
- குத்பா பேருரை
  ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை (20 மே 2022)
- ஹுஸூர் அவர்களின் ஜெர்மனி சுற்றுப்பயணம் - 2013



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித், சித்தீக்கே அக்பர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்புகள் மற்றும் உயர் அந்தஸ்து

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் – முஹம்மது நபி [ஸல்] அவர்கள் புறமிருந்து
முஸைலமா கஸ்ஸாபிற்கு எழுதப்படும் கடிதம். அம்மா பஃது. நிச்சயமாக பூமி அல்லாஹ்வுடையதாகும்.
அவன் தனது அடியார்களில் எவரை விரும்புகிறானோ அவரை அதன் வாரிசாக்குகிறான்.
இறையச்சமுடையவர்களுக்கே நல்ல முடிவு ஏற்படுகிறது.

முஸைலமா கஸ்ஸாபிற்கு எதிராக நடைபெற்ற யமாமா போரின் நிலவரங்களும், சம்பவங்களும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹூதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 20 மே 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு ஹிஜ்ரத் மாதம் **20ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் நடைபெற்ற யமாமா போர் பற்றி கூறப்பட்டு வந்தது. யமாமா போரின் விளக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது யமாமா ஏமனுடைய ஒரு புகழ் பெற்ற நகரமாகும். தற்போது இந்தப் பகுதி சவூதி அரேபியாவில் உள்ளது.

(ஸய்யது ஃபஸ்லுர் ரஹ்மான் எழுதிய ஃப்ர்ஹன்ங் சீரத் பக்கம் 321, ஸவார் அகடமி பப்ளிகேஷன்ஸ் கராச்சி 2003) (உருது தாயிரா மஆருஃப் இஸ்லாமியா தொகுதி 23, பக்கம் 311, வெளியீடு தானிஷ் காஹ் பஞ்சாப் லாஹூர் 2002)

யமாமா மிகவும் பசுமையான செழிப்பான பகுதியாக இருந்தது. ஆக யமாமா பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. யமாமா அழகான நகரங்களில் ஒரு நகரமாக இருந்தது. அதில் முந்திரி மரங்களும் பேரீத்தம் மரங்களும் மிக அதிகமாக இருந்தன.

(முஃஜமுல் பல்தான் தொகுதி 5, பக்கம் 506, யமாமா சொல் தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத்)

யமாமாவில் பனூ ஹனீஃபா கோத்திரத்தினர் வசித்து வந்தனர். இது மிகவும் அதிகமாகப் போர் புரியும் சமுதாயமாக இருந்தது. இவர்கள் தொடர்பாக குர்தூபி விளக்கவுரையில்,

سَتُدْعَوْنَ اِلٰى قَوْمٍ اُولِىْ بَاْسٍ شَدِيْدٍ تُقَاتِلُوْنَهُمْ اَوْ يُسْلِمُوْنَ

என்ற இந்த வசனத்தின் கீழ் இவ்வாறு வந்துள்ளது.

அதாவது நீங்கள் அண்மையில் அதிகமாகப் போர் புரியும் ஒரு சமுதாயத்தின் பால் அழைக்கப்படுவீர்கள். ஒன்று நீங்கள் அவர்களுடன் போர் புரிவீர்கள். அல்லது அவர்கள் முஸ்லிம்கள் ஆகிவிடுவர். இதன் விளக்கவுரையில் எழுதப்பட்டுள்ளது. ஹஸன் கூறுகின்றார்கள்; அதிகமாகப் போர் புரியும் சமுதாயங்கள் என்பது பாரசீகர்களையும் ரோமானியர்களையும் குறிக்கும்.

இப்னு ஜுபைர் கூறுகிறார்கள்; இது ஹஸன் மற்றும் ஸகீஃப் ஆகிய கோத்திரங்களைக் குறிக்கும். ஸுஹ்ரி மற்றும் முகாத்தில் ஆகியோர் கூறுகிறார்கள். இது பனூ ஹனீஃபாவைக் குறிக்கும். அவர்கள் யமாமாவில் வசிப்பவர்கள். மேலும் முஸைலமாவின் கூட்டாளிகளாக இருந்தனர். ராஃபி பின் கதீஜ் கூறுகிறார்கள். நாங்கள் இந்த வசனத்தை ஓதி வந்தோம். ஆனால் அந்த அதிகமாகப் போர் புரியும் சமுதாயம் எது? என்பது எங்களுக்கு தெரியாது. எதுவரை என்றால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எங்களை பனூ ஹனீஃபாவோடு போர் புரிய அழைத்தார்கள். அப்போது தான் இது அந்த சமுதாயத்தைக் குறிக்கிறது என்பது எங்களுக்கு தெரிய வந்தது.

(அல்லாமா குர்தபி அவர்களின் நூல்; அல் ஜாமிஉல் அஹ்காமுல் குர்ஆன் பக்கம் 2850-2851-சூரா அல்ஃபத்ஹ் வசனம் 16 வசனத்தின் அடிக்குறிப்பு, பதிப்பு-தாரே இப்னி ஹஸ்ம்)

ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அல்லது சிலரது பார்வையில் ஹிஜ்ரி 6ஆம் ஆண்டில் பல்வேறு அரசர்களுக்கு தப்லீக் கடிதங்களை எழுதினார்கள். அப்போது, ஒரு கடிதத்தை யமாமாவின் அரசன் ஹவாஸன் பின் அலீ மற்றும் யமாமா வாசிகளின் பெயரில் எழுதினார்கள். அதில் அவருக்கும் யமாமா வாசிகளுக்கும் இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுத்தார்கள். ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டில் பல்வேறு கோத்திரங்களின் பிரதிநிதிக் குழுவினர் மதீனா வந்தபோது, யமாமாவில் இருந்து பனூ ஹனீஃபாவின் பிரதிநிதிக் குழுவும் வந்தது. இந்த பிரதிநிதிக் குழுவில் முஜாஆ பின் முராவும் இருந்தான். அவனுக்கு ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மக்கள் வசிக்காத ஒரு பூமியை சொத்தாக வழங்கியிருந்தார்கள். அதை அவன் கேட்டிருந்தான். இந்த பிரதிநிதிக் குழுவில் ரஜ்ஜால் பின் உன்ஃபாவும் இருந்தான். இவர்கள் தவிர, முஸைலமா கஸ்ஸாப் மற்றும் சமாமா பின் கபீர் பின் ஹபீப் ஆகியோரும் இருந்தனர். இப்னு ஹிஷ்ஷாமின் பார்வையில், அவனது பெயர் முஸைலமா பின் சமாமாவாக இருந்தது. மேலும், அவனது புனைப் பெயர் அபூ சமாமா என்று இருந்தது. பனூ ஹனீஃபாவின் இந்த பிரதிநிதிக் குழு மதீனாவில் அன்சார் கோத்திரத்தைச் சார்ந்த ஒரு பெண்மணியான ரம்லா பின்த் ஹாரிஸ் என்பவருடைய வீட்டில் தங்கியது.

(ஃபுதூஹுல் பல்தானுல் இமாம் அபீ அல்ஹஸன் அஹ்மது பின் யஹ்யா அல்பலாஸரி, பக்கம் 59-தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் 2000)

ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்வதற்காக பிரதிநிதிக் குழுக்கள் தொடர்ச்சியாக வந்தபோது, ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவில் ஒரு வீட்டை நிர்ணயித்துக் கொண்டார்கள். அங்கு பிரதிநிதிக் குழுக்கள் தங்கின. இந்த வீடு ரம்லா பின் ஹாரிஸா அவர்களுக்கு சொந்தமானதாக இருந்தது. அவர் பனூ நஜ்ஜார் கோத்திரத்தின் ஒரு பெண்மணி ஆவார். இது மிகவும் விசாலமான ஒரு வீடாக இருந்தது.

(ஜவாதி அவர்களின் அல்முஃபஸ்ஸலில் ஃபீய் தாரீகுல் அரபு கப்லல் இஸ்லாம்,தொகுதி 5-பக்கம் 258 மக்தபா ஜரீர் 2006)

பனூ ஹனீஃபா கோத்திரத்தைச் சேர்ந்த இந்த மக்கள் ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களைச் சந்திக்கச் சென்ற போது, முஸைலமாவைத் தங்களுடன் அழைத்துச் செல்லவில்லை. தங்களது பொருட்களைப் பாதுகாப்பதற்காக அவனை விட்டுச் சென்றார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபோது,

அவர்கள் முஸைலமாவைப் பற்றிக் கூறினார்கள். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களது ஒரு கூட்டாளி எங்களது பொருள்களைப் பாதுகாக்கிறார் என்று கூறினார்கள். அப்போது, ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களும், மற்ற மக்களுக்குக் கொடுத்த அளவே முஸைலமாவுக்கும் பரிசுகளைக் கொடுக்குமாறு கட்டளையிட்டார்கள். மேலும், அவர் அந்தஸ்த்தில் உங்களை விடக் குறைந்தவர் அல்ல என்று கூறினார்கள். காரணம், அவர் தனது கூட்டாளிகளின் பொருட்களைப் பாதுகாக்கிறார். பிறகு, அந்தப் பிரதிநிதிக் குழு ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து சென்றுவிட்டது. மேலும்,ஹஸ்ரத் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முஸைலமாவுக்காகக் கொடுத்ததையும் அவர்கள் எடுத்துச் சென்றுவிட்டார்கள்.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹஷாம் பக்கம் 852, கதூம் வஃபத் பனிஹனீஃபா, தாருல் குதுபில் இல்மிய்யா)

எடுத்துரைக்கப்பட்ட இந்த அறிவிப்பு மூலம் தெரிய வருவது என்னவென்றால், முஸைலமா தவிர பனூ ஹனீஃபா பிரதிநிதிக் குழுவில் இருந்த எல்லா நபர்களும் ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களைச் சந்தித்தார்கள். ஆனால் சில அறிவிப்புகள் எப்படி உள்ளன என்றால், அவற்றில் முஸைலமாவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்தாக கூறப்பட்டுள்ளது. பொதுவாக முஸைலமா சந்தித்தான் என்பது தொடர்பாகவே அறிவிப்புகள் உள்ளன. இது தொடர்பாக, இரண்டாவது முறை அவன் வந்தபோது சந்தித்திருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது. எவ்வாறு இருப்பினும், இதன் விளக்கத்தில் மேற்கொண்டு இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. இந்த பிரதிநிதிக் குழு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன் ஆஜரானபோது, அதில் முஸைலமாவும் இருந்தான். அது பிறிதோரிடத்தில் எழுதப்பட்டுள்ளது. முஸைலமாவை ஆடைகளால் மூடப்பட்ட நிலையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் அந்த மக்கள் கொண்டு வந்தார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் சஹாபிகளுக்கு மத்தியில் அமர்ந்திருந்தார்கள். அன்னாருடைய கையில் பேரீத்த மரத்தின் ஒரு குச்சி இருந்தது. முஸைலமா அன்னார் (ஸல்) அவர்களுடன் பேசினான். சில கோரிக்கைகளை முன் வைத்தான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீ! என்னிடம் என் கையில் உள்ள இந்த பேரீத்தம் மரத்தின் குச்சியைக் கேட்டாலும் நான் அதையும் உனக்கு தர மாட்டேன்.

(சுப்லுல் ஹுதா வர் ரஷாத் அல்பாபுத்தாஸிஃ வ ஸலாஸுன் ஃபீய் வஃபூத் பனி ஹனிஃபா ....தொகுதி 6, பக்கம் 326, தாருல் குதுபில் இல்மிய்யா 1993)

சஹீஹ் புகாரியில் உள்ள அறிவிப்புகளில் இருந்து தெரியவருவதாவது, முஸைலமா ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை சந்திப்பதற்காக செல்லவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தாமே அவனிடம் சென்றார்கள். ஆக, உபைதுல்லாஹ் பின் அப்தில்லாஹ் பின் அத்பா கூறுகிறார்கள்; முஸைலமா கஸ்ஸாப் மதீனா வந்துள்ளான். ஹாரிஸ் உடைய மகளின் வீட்டில் தங்கியுள்ளான் என்ற செய்தி எங்களுக்கு கிடைத்தது. ஹாரிஸ் பின் குரைஸ் உடைய மகள் அவனது மனைவியாவாள். மேலும், அவர் அப்துல்லாஹ் பின் ஆமிருடைய தாய் ஆவார்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவனிடம் சென்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் ஹஸ்ரத் சாபித் பின் கைஸ் பின் ஷம்மாஸ் இருந்தார். அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பேச்சாளர் என்று அழைக்கப்பட்டார். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கரங்களில் ஒரு குச்சி இருந்தது. அன்னார் (ஸல்) அவர்கள் முஸைலமாவுக்கு அருகில் நின்றிருந்தார்கள். அவனுடன் உரையாடினார்கள். முஸைலமா அன்னார் (ஸல்) அவர்களிடம், தாங்கள் விரும்பினால் நமக்கிடையிலும் இந்த விவகாரத்திற்கிடையிலும் நம்மை விட்டுவிடலாம். மேலும் தங்களுக்குப் பிறகு அதைத் தாங்கள் எனக்கு நிர்ணயித்து விடுங்கள் என்று கூறினான்.

அதாவது, நுபுவ்வத் பற்றிய விவகாரத்திற்கு தீர்ப்பு வழங்கப்பட வேண்டும். அல்லது தங்களுக்குப் பிறகு நுபுவ்வத் எனக்கு கிடைக்க வேண்டும் என்று கூறினான். இதுவே அவன் வைத்த மிகப் பெரும் கோரிக்கை ஆகும். அப்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்; நீ என்னிடம் இந்தக் குச்சியைக் கேட்டாலும் அதை நான் உனக்குத் தர மாட்டேன். எனக்கு காட்டப்பட்ட கனவில், எவர் தொடர்பாக எனக்கு கனவு காட்டப்பட்டதோ அந்த மனிதனாகவே நான் உன்னை கருதுகிறேன். மேலும் இவர் சாபித் பின் கைஸ் (ரலி) ஆவார். இவர் என் சார்பாக உனக்கு பதில் கூறுவார் என்றும் அன்னார் (ஸல்) கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பிச் சென்றுவிட்டார்கள்.

(ஸஹீஹ் புகாரி கிதாபுல் மகாஸி بَابُ قِصَّةِ الأَسْوَدِ الْعَنْسِيِّ அறிவிப்பு எண் 4378)

இவ்வாறே பிறிதோர் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: முஸைலமா கஸ்ஸாப், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் வந்தான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமக்குப் பிறகு என்னை பிரதிநிதியாக ஆக்கினார்கள் என்றால் நான் அன்னார் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவேன் என்று அவன் கூறினான்.

இது முதல் அறிவிப்பின் விளக்கமாக உள்ளது. அவன் அங்கு தனது சமுதாயத்தின் பல நபர்களுடன் வந்திருந்தான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவனிடம் சென்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் ஹஸ்ரத் சாபித் பின் கைஸ் பின் ஷம்மாஸ் (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கையில் பேரீத்தம் மரக் குச்சி இருந்தது. எதுவரை என்றால், முஸைலமா தனது கூட்டாளிகள் மத்தியில் இருந்த போது அன்னார் (ஸல்) அவர்கள் அவனுக்கு முன்னால் நின்றார்கள்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்; நீ என்னிடத்தில் இந்தக் குச்சியைக் கேட்டாலும் நான் உனக்கு அதைக் கூட கொடுக்க மாட்டேன். உன் தொடர்பாக அல்லாஹ் செய்துள்ள தீர்மானத்தை உன்னால் தாண்டிச் செல்ல முடியாது. எவர் தொடர்பாக எனக்கு கனவில் சில விஷயங்கள் காட்டப்பட்டனவோ அந்த மனிதன் தான் நீ என்று நான் காண்கிறேன். இவர் சாபித் ஆவார். அதாவது, ஹஸ்ரத் சாபித் பின் கைஸ். இவர் என் சார்பாக உனக்கு பதில் அளிப்பார்.

(ஸஹீஹ் புகாரி கிதாபுல் மகாஸி بَابُ وَفْدِ بَنِي حَنِيفَةَ، وَحَدِيثِ ثُمَامَةَ بْنِ أُثَالٍ அறிவிப்பு எண் 4373)

பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவனை விட்டுவிட்டு திரும்பிச் சென்று விட்டார்கள். இது புகாரியின் அறிவிப்பாகும்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எனக்குக் காட்டப்பட்ட கனவில், அதாவது எவர் தொடர்பாக எனக்கு கனவு காட்டப்பட்டதோ அந்த மனிதனாகவே நான் உன்னைக் காண்கிறேன் என்ற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல் பற்றி நான் கேட்டேன். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள். ஒரு முறை நான் உறங்கிக் கொண்டிருந்தேன். அதற்கிடையில் நான் எனது கைகளில் இரண்டு தங்கக் காப்புகளைக் கண்டேன்.

இது கனவைப் பற்றிக் கூறப்படுகிறது. அவற்றின் தன்மை என்னை கவலைக்குள்ளாக்கியது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நான் கனவில் காப்புகளைக் கண்டேன். அவற்றின் தன்மை என்னை கவலைக்குள்ளாக்கியது. பிறகு, நான் அவற்றில் ஊதுமாறு எனக்குக் கனவில் வஹீ அறிவிக்கப்பட்டது. ஆக, நான்

அவற்றில் ஊதினேன். அவை பறந்து விட்டன. நான் அதன் விளக்கமாக, எனக்குப் பிறகு வெளிப்படும் இரண்டு பொய்யான நபர்கள் எனப் புரிந்தேன்.

அறிவிப்பாளர் உபைதுல்லாஹ் கூறினார்; அவர்களில் ஒருவன் அன்ஸீ ஆவான். அவனை ஃபிரோஸ் ஏமனில் கொன்று வீழ்த்தினார். இரண்டாவது நபர் முஸைலமா கஸ்ஸாப் ஆவான். இதுவும் புகாரியின் அறிவிப்பு ஆகும்.

(ஸஹீஹ் புகாரி கிதாபுல் மகாஸி

بَابُ وَفْدِ بَنِي حَنِيفَةَ وَحَدِيثِ ثُمَامَةَ بْنِ أُثَالٍ

அறிவிப்பு எண் 4374)

எவ்வாறு இருப்பினும் மேற்கூறப்பட்டுள்ள அறிவிப்புகளில் இருந்து புலப்படுவதாவது, முஸைலமா கஸ்ஸாப் ஒன்றுக்கும் மேற்பட்ட முறை மதீனாவுக்கு வந்தான். ஒருமுறை, அவனது பிரதிநிதிக் குழுவினர் பொருட்களின் பாதுகாப்புக்காக அவனை விட்டுவிட்டு வந்த சமயம் அவனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை சந்திக்க முடியவில்லை. இரண்டாவது முறை அவன் மதீனா வந்தபோது அவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை சந்தித்தான்.

அதில் அவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் (தன்னை) பிரதிநிதியாக ஆக்குவதற்கான கோரிக்கையை முன்வைத்தான். இது தொடர்பாக, சஹீஹ் புகாரியின் விரிவுரையான ஃபத்ஹுல் பாரீ என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது, அன்னார் (ஸல்) அவர்களுடன் அவன் பேசினான். ஒருவேளை முஸைலமா இரண்டு முறை மதீனா வந்திருக்கலாம். முதல்முறை, அவன் அல்லாமல் வேறு ஒருவர் பனூ ஹனீஃபாவின் தலைவராக இருந்தபோது வந்தான். அதாவது, அப்போது அவன் கோத்திரத்தின் தலைவனாக இருக்கவில்லை. வேறு யாரோ ஒருவர் இருந்தார். அவன் அவருக்கு கீழ் இருந்தான். அதனால் தான் பொருட்களைப் பாதுகாப்பதற்காக அவனை விட்டுவிட்டுச் சென்றார்கள்.

இரண்டாவது முறை மக்கள் அவனுக்கு கீழ் இருந்தபோது அவன் வந்தான். மேலும் அப்போது தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவனுடன் உரையாடினார்கள். அல்லது ஒரே சம்பவமாக இருப்பதற்கும் சாத்தியமுள்ளது. அவன் தானே விரும்பி, தனது சுய கௌரவத்தையும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சபையில் ஆஜராவதை விட்டு விலகி ஆணவத்தை வெளிப்படுத்தியவாறும் பொருட்களுக்கு அருகில் நின்றிருக்கலாம். ஆயினும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உள்ளங்களில் அன்பை ஏற்படுத்தும் தமது பழக்கத்தின் காரணமாக அவனுடன் கண்ணியமாக நடந்து கொண்டிருக்கலாம். பிறகு ஹதீஸில் இதுவும் கூறப்பட்டுள்ளது. அதாவது அவன் ஒரு பெரிய எண்ணிக்கையுடன் வந்திருந்தான். அவன் 17 நபர்களுடன் வந்ததாகக் கூறப்படுகிறது. இந்த விஷயமும் முஸைலமா ஒன்றுக்கும் மேற்பட்ட முறை மதீனா வந்தான் என்பதற்கான ஆதாரமாகும்.

(ஃபத்ஹுல் பாரி,ஷரஹ் ஸஹீஹுல் புகாரி லி இப்னி ஹஜர் தொகுதி 8, பக்கம் 112 அறிவிப்பு எண் 4373 கதீமி கிதாப் கானா ஆராம், பாகிஸ்தான்-கராச்சி)

எவ்வாறு இருப்பினும் இந்த பிரதிநிதிக் குழு மீண்டும் மதீனா வந்தடைந்தபோது, அல்லாஹ்வின் பகைவன் முர்தத் ஆகிவிட்டான். மேலும் அவன் நபித்துவ வாதம் புரிந்து விட்டான். மேலும் கூறினான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நபித்துவத்துடன் நான் இணைக்கப்பட்டுள்ளேன். நீங்கள் என்னைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கூறியபோது, அவர் அந்தஸ்தில் உங்களை விடக் குறைந்தவர் இல்லை என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறவில்லையா? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் காரணம், நான் நபி என்பதையும் நானும் நபித்துவத்தில் அன்னாருடன் இணைக்கப்பட்டுள்ளேன் என்பதையும் அன்னார் (ஸல்) அவர்கள் அறிந்திருந்தார்கள் என்று அவன் கூறினான். பிறகு முஸைலமா இட்டுக்கட்டாக வாசகங்களை உருவாக்க ஆரம்பித்தான். மேலும் திருக்குர்ஆனைக் காப்பி அடித்தவாறு வேதத்தை உருவாக்க ஆரம்பித்தான். மேலும் அவர்களுக்கு தொழுகையை மன்னித்துவிட்டான்.

அவன் தன்னுடைய மார்க்கச் சட்டத்தை ஆரம்பித்து விட்டான். தொழுகையை மன்னித்துவிட்டான். ஓர் அறிவிப்பிற்கு ஏற்ப, அவன் இரண்டு தொழுகைகளை, இஷா மற்றும் ஃபஜ்ர் தொழுகைகளை மன்னித்துவிட்டான்.

மக்களுக்கு மதுவையும், விபச்சாரத்தையும் அனுமதிக்கப்பட்டதாக ஆக்கிவிட்டான். அத்துடன் அவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை நபி என்றும் சாட்சி பகர்ந்து வந்தான். பனூ ஹனீஃபா கோத்திரத்தினர் இந்த விஷயங்களில் அவனோடு ஒருமித்து விட்டனர்.

(சுப்லுல் ஹுதா வர் ரஷாத் அல்பாபுத்தாஸிஃ வ ஸலாஸூன் ஃபீய் வஃபூத் பனி ஹனிஃபா ....தொகுதி 6 பக்கம் 326, தாருல் குதுபில் இல்மிய்யா 1993)

முஸைலமாவின் ஆற்றல் அதிகரித்ததற்கு மற்றோரு காரணம், ரஜ்ஜால் பின் உன்ஃபவஹ் அவனுடன் இணைந்து கொண்டது ஆகும். மிகவும் சாதுரியமாக அவன் இதையும் ஏற்றுக் கொண்டான். அதாவது ஒன்று ஷரீஅத்தில் இன்ன இன்ன எளிமைகள் உள்ளன என்று கூறி எளிமைகளை ஏற்படுத்திவிட்டான். அல்லாஹ் எனக்கும் வஹீ அருளினான் என்றான். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நபி ஆவார்கள் என்பதையும் அவன் ஏற்றுக் கொண்டிருந்தான். எவர்கள் முஸ்லிம்கள் ஆனார்களோ அவர்களுக்கு, இவன் நம்மை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட்டும் தொலைவில் கொண்டு செல்கின்றான் என்ற உணர்வு ஏற்படாமலிருக்க அவ்வாறு செய்தான்.

மிகவும் நயவஞ்சகத்துடன் அவன் இந்த எல்லா வேலைகளையும் செய்தான். எவ்வாறு இருப்பினும் எழுதப்பட்டுள்ளது; முஸைலமாவின் ஆற்றலை அதிகரித்த மற்றொரு காரணம், ரிஜ்ஜால் பின் உன்ஃபவஹ் அவனுடன் இணைந்து கொண்டது ஆகும். இவனும் யமாமா வாசியாக இருந்தான். மேலும் பனூ ஹனீஃபாவின் பிரதிநிதிக் குழுவோடும் சேர்ந்து வந்திருந்தான். ஹிஜ்ரத் செய்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் மதீனாவிற்கு வந்துவிட்டான். அங்கே அவன் திருக்குர்ஆன் கற்றான். மார்க்கக் கல்வி கற்றான். முஸைலமா முர்தத் ஆனபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவனை யமாமா வாசிகளை நோக்கி ஆசிரியனாக அனுப்பினார்கள். மேலும் முஸைலமாவுக்குக் கட்டுப்படுவதைவிட்டும் மக்களைத் தடுப்பதற்காக அவனை அனுப்பி வைத்தார்கள்.

ஆனால் அவன் முஸைலமாவை விட அதிக குழப்பத்திற்கு காரணம் ஆனான். மக்கள் முஸைலமாவுக்கு கட்டுப்படுவதை ஏற்றுக் கொண்டு செல்வதை அவன் கண்டபோது அவன் அந்த மக்களின் பார்வையில் தான் காணப்படுவதற்காக அவர்களுடன் இணைந்து கொண்டான். அங்கு சீர்திருத்தம் செய்வதற்காகவும் குழப்பத்தை அகற்றுவதற்காகவும் தான் அவன் அனுப்பப்பட்டான். ஆனால் அவன் முஸைலமாவோடு சென்று சேர்ந்து கொண்டான். மேலும் முஸைலமாவின் பொய் நபித்துவத்தை ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தரப்பிலிருந்து சொல்லப்பட்டதாக ஒரு பொய்யான விஷயத்தையும் உருவாக்கிக் கொண்டான். அதாவது முஸைலமா ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் நபித்துவத்தில் இணைக்கப்பட்டுள்ளான் என்று (கூறினான்). இதையும் அவன் பிரபலப்படுத்திவிட்டான். அவன் திருக்குர்ஆனின் ஞானத்தைக் கற்றுக் கொண்டிருந்தான். எனவே மக்கள் அவனது பேச்சில் நம்பிக்கையும் கொண்டு விட்டார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இருந்த ஒரு நபர் மக்களுக்குத் திருக்குர்ஆனின் போதனைகளைத் தெரியப்படுத்தக் கூடிய ஒரு நபர் முஸைலமாவின் நபித்துவத்திற்கு சாட்சி பகர்கிறார் என்பதை யமாமா வாசிகள் பார்த்த போது, அவர்களால் முஸைலமாவின் நபித்துவத்தை நிராகிரிக்க முடியவில்லை. மக்கள் கூட்டங் கூட்டமாக முஸைலமாவிடம் வந்து அவனிடம் பைஅத் செய்ய ஆரம்பித்து விட்டனர்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் மொழிபெயர்ப்பு நூல்- ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக்(ரலி) பக்கம் 187-188)

முஸைலமா, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினான். அதன் வாக்கியங்கள் இவ்வாறு வருகின்றன: அல்லாஹ்வின் தூதன் முஸைலமா தரப்பிலிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எழுதப்படுகிறது.

அம்மா பஃது, பாதி பூமி எங்களுடையது. பாதி குரைஷியர்களுடையது. ஆனால் குரைஷியர்கள் நியாயமாக நடந்து கொள்வதில்லை.

இதற்கு பதில் அளித்தவாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவனுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள்; பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். முஹம்மது (ஸல்) தரப்பிலிருந்து முஸைலமா கஸ்ஸாபுக்கு எழுதப்படுகிறது. அம்மா பஃது. நிச்சயமாக பூமி அல்லாஹ்வுடையதே ஆகும். அவன் தனது அடியார்களில் தான் நாடுபவரை அதற்கு உரிமையாளர் ஆக்கிவிடுவான். மேலும் இறையச்சமுடையவர்களுக்கே நல்ல முடிவு ஏற்படுகிறது. நேர்வழியைப் பின்பற்றுபவர் மீது சாந்தி உண்டாவதாக.

(ஸலாபி அவர்களின் நூல்-ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக் அவர்களின் வாழ்க்கையும் சாதனைகளும்-பக்கம் 349)

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கடிதத்தை ஹஸ்ரத் ஹபீப் பின் ஸைது (ரலி) அவர்கள் எடுத்துக் கொண்டு சென்றார்கள். அவர்கள் இந்தக் கடிதத்தை முஸைலமாவிடம் கொடுத்தபோது, முஹம்மது (ஸல்) அல்லாஹ்வின் தூதர் ஆவார் என்பதற்கு நீர் சாட்சி பகர்கிறீரா? என்று அவன் கேட்டான்.

அன்னார், ஆம் என்று கூறினார்கள். பிறகு, நான் அல்லாஹ்வின் தூதன் ஆவேன் என்று நீர் சாட்சி பகர்கிறீரா? என்று அவன் கேட்டான். அதற்கு நான் செவிடன் ஆவேன். எனக்கு கேட்காது என்று அன்னார் (ரலி) கூறினார்கள். பேச்சை தட்டிக் கழித்து விட்டார்கள். முஸைலமா மீண்டும் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டுக் கொண்டிருந்தான். அன்னார் (ரலி) அதே பதிலை கூறிவந்தார்கள். மேலும் அவன் விரும்பும் பதிலை அன்னார் கொடுக்காதபோது தன்னையும் நபி என்று அன்னார் (ரலி) ஏற்கவேண்டும் என்று அவன் விரும்பினான். அவன் விரும்பும் பதில் கிடைக்காதபோது அவன் அன்னாரின் உடலின் ஓர் உறுப்பை வெட்டிவிடுவான். இப்போது ஆம் என்று பதில் கூறும் விதமாக சித்தரவதை செய்வதற்காக அவன் அவர்களின் ஏதாவது ஓர் உடல் உறுப்பை வெட்டி விடுவான்.

ஹஸ்ரத் ஹபீப் (ரலி) அவர்கள் பொறுமை மற்றும் உறுதிப்பாட்டின் மலையாக நின்றார்கள். எதுவரை என்றால், அவன் அன்னாரை துண்டு துண்டாக்கிவிட்டான். அவன் முன்னால் ஹஸ்ரத் ஹபீப் (ரலி) அவர்கள் ஷஹாதத் பானத்தை அருந்திவிட்டார்கள். முஸைலமா யமாமாவில் கிளர்ச்சி எனும் கொடியை ஓங்கச் செய்து விட்டான். இப்போது இது வெறும் நபித்துவத்திற்கான வாதம் மட்டும் அல்ல. அதையும் கடந்த அநீதி ஆகும். தன்னை நபியாக ஏற்றுக் கொள்ளாதவர்களுடன் அவன் எவ்வாறு நடந்து கொண்டுள்ளான்! முஸைலமா யமாமாவில் கிளர்ச்சி எனும் கொடியை ஓங்கச் செய்து விட்டான்.

மேலும், யமாமாவில் இருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பணியாளரான ஹஸ்ரத் சமாமா பின் உஸால் (ரலி) அவர்களை வெளியேற்றி விட்டான்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் நூல் மொழிபெயர்ப்பு ஷேக் முஹம்மது அஹ்மது பானிபத்தீ- ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக்(ரலி) பக்கம் 101, இல்ம் வ இர்ஃபான் பப்ளிஷர் லாஹூர் 2004)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முர்தத்களை நோக்கி பல்வேறு படைகளை அனுப்பியபோது, ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களின் தலைமையில் ஒரு படையை முஸைலமாவை நோக்கியும் அனுப்பினார்கள்.

மேலும் அன்னாருக்கு உதவி செய்வதற்காக அன்னாருக்குப் பின்னால் ஷுரஹ்பீல் பின் ஹஸனாவை அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஷுரஹ்பீல் வருவதற்கு முன்பாகப் போரை துவங்கக் கூடாது என்று இக்ரிமா (ரலி) அவர்களிடம் வலியுறுத்திக் கூறியிருந்தார்கள்.

ஆனால் ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் அவசரப்பட்டுவிட்டார்கள். தமக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்பதற்காக, ஹஸ்ரத் ஷுரஹ்பீல் (ரலி) அவர்கள் வந்தடைவதற்கு முன்னரே யமாமா மக்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டார்கள். ஆனால் அன்னார் (ரலி) அவர்கள் கஷ்டத்தில் சிக்கிக் கொண்டார்கள். மேலும் அவர்களுக்கு தோல்வியை எதிர்கொள்ள நேர்ந்தது. முஸைலமாவின் படை மிகவும் பெரிதாக இருந்தது. ஹஸ்ரத் ஷுரஹ்பீல் (ரலி) அவர்களுக்கு இந்த சம்பவத்தைப் பற்றி தெரிய வந்தபோது அவர்கள் வழியிலேயே நின்றுவிட்டார்கள். மேலும் ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தைப் பற்றி இவ்வாறு கடிதம் எழுதினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருக்கு பதில் கடிதம் இவ்வாறு எழுதினார்கள். நான் உமது முகத்தை கூட பார்க்க மாட்டேன். நீரும் என்னை பார்க்கக் கூடாது. நான் உமக்கு கூறிய கட்டளைக்கு நீர் மாறுசெய்துள்ளீர். இங்கு திரும்பி வராதீர். மக்களிடம் கோழைத் தனம் ஏற்பட்டுவிடப் போகிறது. நீர் ஹஸ்ரத் ஹுஸைஃபா மற்றும் அர்ஃபஜாவிடம் சென்றுவிடுவீராக. அவர்களுடன் இணைந்து அம்மான் மற்றும் மஹ்ரா வாசிகளுடன் போர் செய்வீராக.

மஹ்ரா என்பதும் அரேபியாவின் தெற்கில் மேற்கு கரையோரம் இந்தியப் பெருங்கடலுக்கு அருகில் உள்ள ஒரு பகுதியாகும்.

பிறகு அங்கிருந்து தமது படையை உடன் அழைத்துக் கொண்டு ஏமன் மற்றும் ஹிழ்ர் மௌத்துக்கு செல்வீராக. அங்கு சென்று இஸ்லாமிய படையோடு இணைந்து கொள்வீராக. ஹிழ்ர் மௌத் என்பதும் கூட ஏமனின் மேற்கில் உள்ள ஓர் அரசாங்கம் ஆகும். அவற்றின் தெற்கு எல்லையில் கடல் உள்ளது.

பிறிதோர் அறிவிப்பில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கடிதத்தின் சொற்கள் இவ்வாறு காணக்கிடைக்கின்றன. ஆளுமை தெரியாது. கற்றுக் கொள்ளத் தயங்குகிறீர். உமக்கு இந்த அளவு சரியாகத் தெரியவில்லை. போரின் வழிமுறைகள் முதலியவை. எவ்வளவு திறமை பெற்றிருக்க வேண்டுமோ அவ்வளவு திறமையை நீர் கொண்டிருக்கவில்லை. கற்றுக் கொள்ளத் தயங்குகிறீர். எந்த நாளில் நீர் என்னை சந்திப்பீரோ அப்போது நான் உம்முடன் எப்படி நடந்து கொள்கிறேன் என்று பாரும். நீர் ஏன் ஷுரஹ்பீல் வரும் வரை காத்திருந்து, அவருடைய உதவி ஒத்தாசையோடு போர் புரியவில்லை? இப்போது ஹுஸைஃபாவுக்கு செல்லுங்கள். அவர்களுக்கு உதவி செய்யுங்கள். இப்போது நீர் காலத்தின் கலீஃபா அவர்களின் கட்டளைக்கு மாறு செய்துள்ளீர். தம்மைத் தாமே பெரிய ஆசிரியராகக் கருதுகிறீர். கற்றுக் கொள்ள விரும்பவில்லை. இப்போது என்னிடம் வராதீர். நீர் என்னை சந்திக்கும்போது நான் உம்முடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று பார்ப்பேன்.

ஆனால் எவ்வாறு இருப்பினும்

இப்போது நீர் ஹுஸைஃபாவிடம் செல்வீராக. அவருக்கு உதவி செய்வீராக. எவர்கள் எந்தத் திட்டத்திற்காக அனுப்பப்பட்டனரோ அவர்களுக்கு அதில் நீர் உதவி செய்வீராக. ஒருவேளை அவர்களுக்கு உமது உதவியின் தேவை இருக்கவில்லை என்றால் ஏமன் மற்றும் ஹிழ்ர் மௌத் சென்றுவிடுவீராக. முஹாஜிர் பின் உமய்யாவுக்கும் உதவி செய்வீராக. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முஹாஜிர் பின் உமய்யாவை கிந்தா எனும் கோத்திரத்துடன் போர்புரிவதற்காக ஹிழ்ர் மௌத் என்ற இடத்திற்கு அனுப்பி வைத்திருந்தார்கள்.

(தாலிப் ஹாசிமி அவர்கள் எழுதிய நூல்- ஸீரத் கலீஃபத்துர் ரஸூல் ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக் (ரலி) பக்கம்-204) (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அரசாங்க கடிதங்கள் பக்கம் -24, பதிப்பு 1960)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், வேறு ஒரு கட்டளை வரும்வரை அங்கேயே இருக்குமாறு ஷரஹ்பீல் அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். பிறகு ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களை யமாமாவுக்கு அனுப்புவதற்கு முன்னால் ஹஸ்ரத் ஷரஹ்பீல் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள்; காலித் உங்களிடம் வரும்போது நீங்கள் யமாமாவில் உதவி செய்து முடித்துவிட்டால் பின்னர் குஸாஆவை நோக்கிச் செல்லுங்கள். மேலும் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுடன் இணைந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதை நிராகரித்து அதை எதிர்ப்பதில் முனைந்திருக்கக்கூடிய, அந்த கிளர்ச்சியாளர்களுக்கு பாடம் புகட்டுங்கள்.

(தாரீகுத் தபரி, தொகுதி 2, பக்கம் 275, பதிப்பு தாருல் குதுபில் இல்மிய்யா லெப்னான் 2012)

அவர்கள் நிராகரிப்பை மட்டும் மேற்கொள்ளவில்லை. மாறாக அதற்கும் மேற்பட்டு எதிர்க்கவும் செய்தார்கள். ஹஸ்ரத் ஷரஹ்பீல் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வழிகாட்டலுக்கு நேர்மாறாக, ஹஸ்ரத் இக்ரிமாவைப் போன்று அவசரப்பட்டார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அன்னாரை வந்தடைவதற்கு முன்பாகவே முஸைலமாவுடன் போரை துவங்கிவிட்டார்கள். ஆயினும் அவர்களும் தோல்வியை தழுவினார்கள். இதனால் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கோபத்தை வெளிப்படுத்தினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு உதவி செய்வதற்காக, அன்னாரின் பின்பக்கப் படையை பாதுகாப்பதற்காக ஹஸ்ரத் ஸுலைத் (ரலி) அவர்களின் தலைமையில் மேற்கொண்டு உதவி படைகளையும் அனுப்பி வைத்தார்கள்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

(அல் காமில் ஃபித் தாரீக் லி இப்னி அஸீர் தொகுதி, பக்கம் 219, தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் 2006)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை முஸைலமாவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். மேலும் அன்னாருடன் இணைந்து போர்புரிவதற்காக முஹாஜிர்கள் மற்றும் அன்சார் சகோதரர்களின் ஒரு குழுவையும் உடன் அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்சார் சகோதரர்களுக்கு ஹஸ்ரத் சாபித் பின் கைஸ் (ரலி) அவர்களையும் முஹாஜிர்களுக்கு ஹஸ்ரத் அபூஹுஸைஃபா மற்றும் ஹஸ்ரத் ஸைது பின் கத்தாப் (ரலி) ஆகியோரை அமீராக நியமித்தார்கள். இவ்வாறு எத்தனை கோத்திரங்கள் இருந்தனவோ அவற்றில் ஒவ்வொரு கோத்திரத்துக்கும் ஒரு நபரை கண்காணிப்பாளராக ஆக்கினார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் புதாஹ் எனும் இடத்தில் அந்தப் படை வருவதற்காக காத்திருந்தார்கள். புதாஹ் என்பது பனீ ஸயீமின் பகுதியில் உள்ள ஓர் இடமாகும்.

எவ்வாறிருப்பினும் அவர்கள் அனைவரும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் சென்றடைந்ததும் அவர்கள் யமாமாவை நோக்கி புறப்பட்டார்கள். பனூ ஹனீஃபா கோத்திரத்தினர் அந்த நாளில் மிக அதிகமாக இருந்தார்கள். அவர்களின் எண்ணிக்கை 40,000 போர் வீரர்களை உள்ளடக்கியிருந்தது. முஸைலமாவுடன் இருந்த யமாமா மக்களின் எண்ணிக்கை 40,000 ஆக இருந்தது. அல்லது ஓர் அறிவிப்புக்கு ஏற்ப அவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சம் அல்லது அதைவிட அதிகமாக இருந்தது. ஆனால் முஸ்லிம்களோ 10 ஆயிரத்தை விட கூடுதலாக இருந்தார்கள்.

(அல்பதாயா வன் நஹாயா, தொகுதி 3 பாகம் 6, பக்கம் 267, தாருல் குதுபில் இல்மிய்யா)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

எவ்வாறிருப்பினும் அங்கு இந்தப் போர் துவங்க இருந்தபோது அதற்கு முன்னரே, பெரிய போருக்கு முன்னாலேயே முஸ்லிம்கள் பனூ ஹனீஃபா கோத்திரத்தின் ஒரு தலைவனை சிறை பிடித்துவிட்டார்கள். ஆக, ஓர் அறிவிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

பனூ ஹனீஃபாவின் ஒரு தலைவனாக இருந்த முஜாஆ பின் முராரா ஒரு குழுவோடு வெளியே புறப்பட்டபோது முஸ்லிம்கள் அவனையும் அவனுடைய கூட்டாளிகளையும் பிடித்துவிட்டார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவனுடைய கூட்டாளிகளைக் கொன்றுவிட்டார்கள். முஜாஆவை உயிருடன் விட்டுவிட்டார்கள். ஏனென்றால் பனூ ஹனீஃபாவில் அவனுக்கு மிகவும் கண்ணியம் இருந்தது.

(அல் காமில் ஃபித் தாரீக் லி இப்னி அஸீர் தொகுதி2,பக்கம் 219-220தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் 2006 )

இதன் மேற்கொண்ட விபரம் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஆரிஸ் என்னும் இடத்தில் இறங்கிய போது அன்னார் 200 குதிரை வீரர்களை முன்னால் அனுப்பினார்கள். மேலும் உங்களுக்கு யார் கிடைத்தாலும் அவர்களை சிறை பிடித்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அந்த குதிரை வீரர்கள் புறப்பட்டார்கள். எதுவரை என்றால் அவர்கள் முஜாஆ பின் முராராவை அவனுடைய நட்புக் கோத்திரத்தைச் சேர்ந்த 23 நபர்களுடன் பிடித்துவிட்டார்கள். அவர்கள் பனூ நமீர் உடைய ஒரு நபரைத் தேடி புறப்பட்டிருந்தார்கள். அவர்கள் வெளியே புறப்பட்டபோது அவர்கள் ஹஸ்ரத் காலித்(ரலி)அவர்களின் வருகையைக் குறித்து அறியாமல் இருந்தனர். முஸ்லிம்கள் அவர்களிடம் நீங்கள் யார்? என்று கேட்டார்கள். அதற்கு நாங்கள் பனூ ஹனீஃபா கோத்திரத்தினர் என்று கூறினர். முஸ்லிம்கள் இவர்கள் முஸைலமா மூலமாக ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை நோக்கி அனுப்பப்பட்ட ஒற்றர்கள் என்று எண்ணினார்கள். பொழுது விடிந்ததும் அந்த மக்கள் எதிரெதிராக வந்தார்கள். அப்போது முஸ்லிம்கள் அவர்களை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி), அந்த மக்களைப் பார்த்தபோது இவர்கள் முஸைலமா உடைய ஒற்றர்கள் என்று கருதினார்கள்.

அந்த மக்களிடம் பனூ ஹனீஃபா

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

மக்களே! உங்களுடைய தோழர் அதாவது முஸைலமா பற்றி என்ன கூறுகிறீர்கள்? என்று அன்னார் (ரலி) கேட்டார்கள். அவர் அல்லாஹ்வின் தூதர் ஆவார் என்று அந்த மக்கள் சாட்சி கூறினர். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் முஜாஆவிடம், நீ! என்ன கூறுகிறாய்?என்று கேட்டார்கள். அதற்கு அவன் இறைவன் மீது ஆணையாக! நானோ பனூ நமீர் உடைய ஒரு நபரைத் தேடி புறப்பட்டேன். அவன் எங்களுடைய கோத்திரத்தின் மக்களைக் கொன்றுவிட்டான். மேலும் நான் முஸைலமாவின் நெருக்கமானவர்களைச் சேர்ந்தவன் அல்ல என்று கூறினான். எவ்வாறு இருப்பினும் அவன் அப்போது அச்சத்தின் காரணமாவோ அல்லது வேறு ஏதோ ஒரு காரணத்தினாலோ தனது விஷயத்திலிருந்து பின்வாங்கிவிட்டான். நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன் ஆஜராவேன். மேலும் நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தேன். மேலும் இப்பொழுதும் அதே நிலையில் தான் இருக்கிறேன் என்றான். மற்ற மக்களும் அழைத்துவரப்பட்டனர். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், அவர்கள் அனைவரையும் கொல்லச் செய்தார்கள். எதுவரை என்றால் சாரியா பின் முஸைலமா பின் ஆமிர் எஞ்சியிருந்த போது அவன் கூறினான்; காலிதே! நீர் விரும்பினால் முஜாஆவை உயிருடன் விட்டு வைப்பீராக. ஏனென்றால் இவர் போர் மற்றும் அமைதி நாட்களில் உங்களுடைய உதவியாளராக இருப்பார். முஜாஆ ஒரு தலைவனாக இருந்தான். எனவே அன்னார் அவனைக் கொல்லவில்லை.

அன்னார் (ரலி) அவரையும் உயிருடன் விட்டுவிட்டார்கள். அந்த இருவர் தொடர்பாகவும் அதாவது அவர்கள் இருவரையும் இரும்புச் சங்கிலியால் கட்டி வைக்குமாறு கட்டளை இட்டார்கள். முஜாஆ சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில், அன்னார் (ரலி) அவனை அழைப்பார்கள். மேலும் அவனோடு உரையாடுவார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தன்னை கொன்றுவிடுவார்கள் என்று முஜாஆ நினைத்தான். அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தபோது, இப்னு முகைராவே! (இது ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் புனைப்பெயராகும்.) நான் முஸ்லிம் ஆவேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் நிராகரிக்கவில்லை. நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன் ஆஜராவேன். மேலும் அன்னாரிம் இருந்து முஸ்லிமாகி வெளியே வந்தேன். இப்பொழுது நான் போருக்காக புறப்படவில்லை. பின்னர் நமீரியை தேடிய விஷயத்தை மீண்டும் கூறினான்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கூறினார்கள்: உன்னை கொலை செய்வதற்கும், விட்டுவிடுவதற்காகவும் இடையில் மிகக் குறைவான இடைவெளிதான் உள்ளது. அதாவது சிறை பிடித்திருப்பது எதுவரை என்றால் அல்லாஹ் நம்முடைய போரில் தீர்ப்பு வழங்கிவிடுவான். அதற்கான தீர்ப்பை அவன் வழங்க இருக்கின்றான். மேலும் அவர்கள் அவனைத் தாம் மாலிக் நுவைராவைக் கொன்றதற்குப் பிறகு திருமணம் செய்த தமது அந்த மனைவியிடம் ஒப்படைத்துவிட்டார்கள். சிறைக் கைதியாக இருக்கும் அவனை நன்றாக பார்த்துக் கொள்ளுமாறு மனைவிக்குக் கட்டளையிட்டார்கள்.

பகைவர்களை பற்றிய தகவல் கொடுப்பதற்காகவும் செய்தி தெரிவிப்பதற்காகவும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தான் தன்னை பிடித்து வைத்திருக்கிறார்கள் என்று முஜாஆ நினைத்தான். தங்களுக்கு தெரியும். நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன் ஆஜரானேன். மேலும் அன்னாருடைய இஸ்லாத்தில் பைஅத் செய்தேன் என்று அவன் கூறினான். (அவன் மீண்டும் மீண்டும் இதையே கூறிக் கொண்டிருந்தான்) பிறகு நான் என்னுடைய சமுதாயத்திற்குத் திரும்பி வந்தேன். மேலும் இன்றும் என்னுடைய நிலை அவ்வாறுதான் இருக்கிறது. ஆனால் மேற்கொண்டு வரக்கூடிய சம்பவங்கள் மூலமாக இவை அனைத்தும் பொய் என்பது தெரிய வருகிறது. நேற்று இருந்த அதே நிலைதான் இன்றும் எனக்கு உள்ளது என்று அவன் கூறினான்.

(அல்இக்திஃபா பிமா தஸ்மினா மின் மகாஸி ரஸூலுல்லாஹ் வஸ் ஸலாஸத்துல் குலஃபா பாகம் 2, பக்கம் 119-120, தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் ஹிஜ்ரி 1420)

முஜாஆவுடைய குழுவில் வேலை முடிந்ததும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் யமாமாவை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் வரக்கூடிய செய்தி கிடைத்து முஸைலமா தன்னுடைய கோத்திரமான பனூ ஹனீஃபாவை அழைத்துக் கொண்டு போர் புரிவதற்காக புறப்பட்டான். மேலும் அக்கரபா என்ற இடத்திற்கு வந்து முகாமிட்டான். இந்த இடமும் யமாமாவின் எல்லைப் புறத்தில் யமாமாவுடைய வயல்கள் மற்றும் பசுமையான பகுதிகளுக்கு அருகில் அமைந்திருந்தது. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் திட்டம் வகுப்பதற்கான ஏற்பாடு செய்தார்கள். அன்னார் (ரலி) எதிரியை ஒருபோதும் பலவீனமானவனாகக் கருதியதில்லை. எதிரி திடீர்தாக்குதல் தொடுத்துவிடவோ, ஏதாவது சதி செய்துவிடவோ கூடாது என்று போர்க்களத்தில் எப்பொழுதும் முழுமையான ஆயத்தத்தோடும் முழுமையான எச்சரிக்கையோடும் இருப்பார்கள்.

அன்னார் (ரலி) சுயமே உறங்கமாட்டார்கள். மற்றவர்களை உறங்கச் செய்வார்கள் என்ற அவர்களது இந்த பண்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. முழு ஆயத்தத்தோடு இரவைக் கழிப்பார்கள். எதிரியின் எல்லா விஷயமும் அன்னாருக்கு தெரிந்திருந்தது. படையை வரிசைபடுத்துவதற்கான நேரம் நெருங்கியிருந்தது. இந்தப் போரில் கொடியை ஏந்துபவராக ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹஃப்ஸ் பின் காணிப் (ரலி) அவர்கள் இருந்தார்கள். பிறகு இது ஹஸ்ரத் சாலிம் மௌலா அபூ ஹுஃஸைஃபா அவர்களின் கைக்கு மாறியது.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் இந்தப் போரில் ஹஸ்ரத் ஷரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்களை முன்னால் அனுப்பி வைத்தார்கள். மேலும் இஸ்லாமிய படைகளை ஐந்து பாகங்களாகப் பிரித்து விட்டார்கள். முன்னணிப் படையில் ஹஸ்ரத் காலித் மக்ஸ் (ரலி) அவர்களையும் வலப்புறப் படையில் ஹஸ்ரத் ஷுஜாஆ அவர்களையும் மத்தியப் படையில் ஹஸ்ரத் ஸஃது பின் கத்தாப் அவர்களையும், குதிரை வீரர்களுக்கு உஸாமா பின் ஸைது (ரலி) அவர்களையும் தலைவர்களாக நியமித்தார்கள். மேலும் ஒட்டகங்களை பின்னால் நிறுத்தினார்கள். அவற்றில் பல்லக்குகள் அமைக்கப்பட்டிருந்தன. பெண்கள் அதில் அமர்ந்திருந்தார்கள். மேலும் இது போருக்கு முன்னால் செய்யப்பட்ட கடைசி வரிசைப்படுத்தலாக இருந்தது.

(டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்களின் நூல்-ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக் அவர்களின் வாழ்க்கையும் சாதனைகளும்-பக்கம் 357-358)

மறுபுறம் முஸைலமா கஸ்ஸாப் உடைய படையும் ஆயத்தமாக நின்று கொண்டிருந்தது. முஸைலமா உடைய மகன் ஷரஹ்பீல் தன்னுடைய கோத்திரத்து மக்களிடம், பனூ ஹனீஃபா மக்களே! இன்றைய நாள் தன்மானத்தை காட்ட வேண்டிய நாளாகும். ஒருவேளை இன்று நீங்கள் தோல்வியைத் தழுவிவிட்டால் பிறகு உங்களுடைய பெண்கள் அடிமைகளாக ஆக்கிக் கொள்ளப்படுவார்கள். நிக்காஹ் செய்யாமலேயே அவர்களிடமிருந்து பலன் பெறப்படும். எனவே இன்றைய நாள் நீங்கள் உங்களுடைய கண்ணியம் மற்றும் மரியாதைக்காக முழு வீரத்தைக் காட்டுங்கள். உங்களுடைய பெண்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

(தாரீகுத் தபரி லி அபீ ஜஃபர் முஹம்மது பின் அத்தபரி தொகுதி 2 பக்கம் 278 தாருல் குதுபில் இல்மிய்யா2012)

எவ்வாறு இருப்பினும் இதற்குப்

பிறகு மும்முரமான போர் நடைபெற்றது. அந்தப் போர் எந்த அளவு பயங்கரமானதாக இருந்தது என்றால் முஸ்லிம்களுக்கு இதுபோன்ற ஒரு போரை இதற்கு முன் எதிர்கொள்ள நேரிட்டதில்லை. முஸ்லிம்கள் தோல்வி அடைந்துவிட்டார்கள்.

இங்கும் தோல்வி ஏற்பட்டது. பனூ ஹனீஃபா கோத்திரத்து மக்கள் முஜாஆவை விடுவிப்பதற்காக முன் நோக்கி சென்றார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கூடாரத்தை விட்டுச் சென்று விட்டிருந்தார்கள். எனவே அந்த மக்கள் முஜாஆவை சென்றடைந்தார்கள். அவன் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் மனைவியின் கண்காணிப்பில் இருந்தான். முர்தத்துகள் அன்னாரின் மனைவியை கொல்ல நினைத்தார்கள்.

ஆனால் முஜாஆ அவர்களை தடுத்துவிட்டான். மேலும் நான் இந்தப் பெண்ணுக்கு அடைக்கலம் தருகிறேன் என்று கூறினான். எனவே அவர்கள் அந்தப் பெண்ணை விட்டுவிட்டார்கள்.

நீங்கள் ஆண்கள் மீது தாக்குதல் தொடுங்கள் என்று முஜாஆ கூறினான். ஒருபுறம் நான் முஸ்லிம் ஆவேன் என்று வாதம் புரிந்தான். இப்பொழுது நீங்கள் ஆண்கள் மீது தாக்குதல் தொடுங்கள் என்று அவன் எதிரிகளிடம் கூறினான். மேலும் அவர்களின் கூடாரங்களைக் வெட்டிவிட்டார்கள்.

(அல் காமில் ஃபித் தாரீக் லி இப்னி அஸீர் திக்ர் முஸைலமா வ அஹ்லே யமாமா தொகுதி2,பக்கம் 221 தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் 2003)

இஸ்லாமியப் படை பின்நோக்கிச் சென்ற பிறகும் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் மன உறுதி, தைரியம் மற்றும் நிலைத்திருத்தலில் சிறிதும் சறுக்கல் ஏற்படவில்லை. அன்னாருக்கு ஒரு கணம் கூட தோல்வி பற்றிய சிந்தனை வரவில்லை. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் உரத்த குரலில் தம்முடைய படையைப் பார்த்து, முஸ்லிம்களே! தனித்தனியாக ஆகிவிடுங்கள். ஒவ்வொரு கோத்திரமும் தனித்தனியாக ஆகி சண்டையிடட்டும். இந்த நிலையிலேயே எதிரிகளுடன் போரிடுங்கள். இவ்வாறு எந்தக் கோத்திரம் போரிடுவதில் மிக அதிக வீரத்தை வெளிப்படுத்தியது என்று நாம் பார்க்கட்டும் என்று கூறினார்கள்.

இந்த அறிவிப்பின் நோக்கம் என்னவாக இருந்தது என்றால் எல்லா முஸ்லிம்களும் தத்தமது கோத்திரத்தின் கொடியின் கீழ் போரிடவேண்டும். இதன் மூலம் எல்லா கோத்திரத்திலும் ஒருவகையில் ஒரு புதிய ஆன்மாவை அன்னார் ஊதிவிட்டார்கள். மேலும் அதில் தனித்தன்மை மற்றும் வீரத்தை நிரூபிப்பதற்காக ஒருவர் மற்றவரை முந்தக்கூடிய ஓர் உணர்வை ஏற்படுத்திவிட்டார்கள்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் நூல்; ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி), பக்கம்:195-196)

முஸ்லிம்களும் ஒருவர் மற்றவருக்கு எழுச்சி ஊட்டினார்கள். இதற்கான மேலும் விளக்கம் இவ்வாறு கிடைக்கப் பெறுகிறது.

ஹஸ்ரத சாபித் பின் கைஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்; முஸ்லிம் குழுவினரே! நீங்கள் உங்களைப் பழக்கப்படுத்திக் கொண்ட அந்த விஷயம் எவ்வளவு கொடியதாக இருக்கிறது! அதாவது எளிமைக்குப் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அது மிகவும் கொடிய விஷயம் ஆகும்.

கண்ணியத்திற்குரிய சஹாபி பெருமக்கள் ஒருவர் மற்றவருக்குப் போருக்காக எழுச்சியூட்ட ஆரம்பித்தார்கள். மேலும் இவ்வாறு கூறினார்கள். சூரா பக்ராவின் மக்களே இன்று மந்திரம் முறிந்துவிட்டது.

ஹஸ்ரத் சாபித் பின் கைஸ் (ரலி) அவர்கள் பாதி கால்கள் வரை மண்ணைத் தோண்டி தன்னைப் புதைத்துக் கொண்டார்கள். ஹனூத் என்ற திரவியத்தைப் பூசிக் கொண்டார்கள். இது அரபு மக்களிடம் ஒரு வழக்கமாக இருந்தது. சில மக்கள் தம்மை மிகவும் வீரராக காட்டிக் கொள்வதற்காக இவ்வாறு செய்து வந்தார்கள். ஆக எந்த செயலை மரணித்த பிறகு மக்கள் எனக்கு என்ன செய்வார்களோ அதை நானே எனக்கு செய்து கொண்டேன் என்பது போன்று வெளிப்படுத்துகிறார்கள்.

நான் மரணிப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்பது போன்று தம்மை பாதி அளவு நிலத்தில் புதைத்துக் கொண்டார்கள். ஹனூத் திரவியம் சில வாசனை திரவியங்கள் சேர்ந்ததாக இருந்தது. அதை மரணித்தவரைக் குளிப்பாட்டிய பிறகு அவரது உடலில் பூசுவார்கள். அல்லது நீண்ட காலம் அழுகாமல் இருப்பதற்காக பிணத்தின் மீது பூசக்கூடிய மருந்தாகும். எவ்வாறு இருப்பினும் இவர்கள் அறிவிப்பில் கூறுகிறார்கள். அன்னார் கஃபன் அணிந்து கொண்டார்கள். மேலும் எதிரிகளோடு போரிடுவதில் உறுதியாக நிலைநின்றார்கள். எதுவரை என்றால் ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள்.

(அல்பதாயா வன் நஹாயா தொகுதி 3,பாகம் 6,பக்கம் 320-தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் 2001)

இது பற்றி மேற்கொண்டு விளக்கம் உள்ளது. இனிவரும் காலத்தில் எடுத்துரைக்கப்படும். இன்ஷாஅல்லாஹ்.

இப்பொழுது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துக் கூற விரும்புகிறேன். எல்லாவற்றுக்கும் முதலாவதாக, ஒரு ஷஹீத் பற்றிய குறிப்பு உள்ளது. அன்னார் கடந்த நாட்களில் ஷஹீத் ஆக்கப்பட்டார்கள். அன்னார் எல் பிளாட் அவ்காடா ஜமாஅத்தின் தலைவரான மாஸ்டர் முனவ்வர் அஹ்மது சாஹிப் அவர்களுடைய மகன் அப்துஸ் சலாம் சாஹிப் ஆவார்கள். அன்னார் மே 17 அன்று ஷஹீத் ஆக்கப்பட்டார்கள். அன்னாருக்கு வயது 35 ஆக இருந்தது. அஹ்மதிய்யத்தின் எதிரி ஒருவன் அன்னாரை கத்தியால் குத்தி ஷஹீத் ஆக்கிவிட்டான். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

விவரங்களுக்கு ஏற்ப, அப்துஸ் சலாம் சாஹிப் தமது இரண்டு சிறு பிள்ளைகள் அன்பிற்குரிய கமருஸ்ஸலாம் 6 வயது மற்றும் அன்பிற்குரிய பதருஸ்ஸலாம் வயது 4 ஆகியோருடன் ஏதோ ஒரு பணிக்காக வீட்டை விட்டு வெளியேறினார்கள். இன்னும் கூறப்போனால் வீடுகளின் தண்ணீர் இணைப்பை சரிசெய்வதற்காக அவர் அழைக்கப்பட்டார். இதுவும் ஒரு திட்டமாக தெரிகிறது. திட்டம் தீட்டி வீட்டை விட்டு வெளியே வரவழைக்கப்பட்டார். எதிரி பின்புறமாக இருந்து தாக்கி அன்னாரை குத்திவிட்டான். எவ்வாறு இருப்பினும் அன்னார் வீட்டை விட்டு வெளியேறியபோது முலாஸிம் ஹுஸைன் என்று அறியப்படுபவனான ஹாஃபீஸ் அலீ ரஸா என்ற அஹ்மதிய்யத்தின் எதிரி அன்னாரை பின்தொடர்ந்தான். மேலும் கத்தியால் குத்திவிட்டான். மாலை வேளையாக இருந்தது. தாக்குதல் காரணமாக அப்துஸ் சலாம் சாஹிப் காயங்களை தாங்கமுடியாமல் தமது இரண்டு அப்பாவி பிள்ளைகளுக்கு முன்னால் சம்பவ இடத்திலேயே ஷஹீத் ஆகிவிட்டார்கள்.

முதலில் அன்னாரை பின்புறமாக தாக்கினான். சிறுநீரகத்தை அறுத்து விட்டான். பிறகு குடலில் தாக்கினான். பிறகு நெஞ்சில் குத்தினான். எவ்வாறு இருப்பினும் அன்னார் தமது பிள்ளைகள் கண் முன்னாலேயே சம்பவ இடத்திலேயே ஷஹீத் ஆகிவிட்டார்கள்.

பின்னால் அந்தக் குற்றவாளி சம்பவ இடத்திலிருந்து ஓடிவிட்டான். இந்தக் கொலையாளிகள் சொர்க்கத்தை வேண்டி அஹ்மதிகளை ஷஹீது ஆக்குகிறார்கள். அவன் அவ்காடா மாவட்டத்திலுள்ள எல் பிளாட் பகுதியின் உள்ளூர் ஜாமிஆ அமினியா ஃபரிதிய்யாவின் மாணவனாக இருந்தான்.

இந்த சம்பவம் நடப்பதற்கு இரண்டு நாட்கள் முன்புதான் மதரஸாவில் இருந்து திருக்குர்ஆன் மனனம் செய்யும் படிப்பை முடித்துவிட்டு வெளியேறி இருந்தான்.

மதரஸா சார்பாக நடைபெற்ற நிறைவு நிகழ்ச்சியில் மதரஸாவின் நிர்வாக மௌலவி தனது சொற்பொழிவில் தேர்ச்சி பெற்ற மாணவர்களிடம் கூறினான். (நிகழ்ச்சியோ திருக்குர்ஆன் மனனம் செய்தற்காக நடந்தது) அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக நீங்கள் அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவன் கூறினான். நன்றாக தூண்டிவிட்டான். தீவிர நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என அவன் வலியுறுத்தினான். எவ்வாறு இருப்பினும் எதன் மூலமாக இவர்கள் மக்களுக்கு சொர்க்கத்தைப் பெற்றுதர விரும்புகிறார்களோ இவர்கள் சுயமாகவும் நரகத்தின் பாதையை தேடுகிறார்கள். மேலும் மக்களையும் நரகத்தில் கொண்டு செல்ல முயற்சி செய்கிறார்கள்.

ஷஹீத் மர்ஹூம் அவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய சஹாபி மர்ஹூம் அவர்களின் தந்தை வழிக் கொள்ளுப் பாட்டனாரான, ஹோஷியார்பூர் மாவட்டத்தின் ப்ஹம்மியா(ன்)எனும் ஊரைச் சேர்ந்த ஹஸ்ரத் நபி பக்ஷ் சாஹிப் (ரலி) அவர்கள் மூலம் வந்தது.ஷஹீது மர்ஹூம் அவர்களின் தந்தை வழிப்பாட்டனார் மதிப்பிற்குரிய முஹம்மது சித்தீக் சாஹிப் அவர்கள் பிறப்பால் அஹ்மதிய்யாக இருந்தார்கள். பாகிஸ்தான் உருவான பிறகு அன்னார், அவ்காடா சென்றுவிட்டார்கள். ஷஹீது மர்ஹூம் அவர்கள் பத்தாம் வகுப்பு வரை உயர்நிலை கல்வி வரை படித்தார்கள்.பிறகு விவசாயம் பார்த்து வந்தார்கள்.

வக்ஃபே நவ் என்ற அருளுக்குரிய திட்டத்திலும் இணைந்திருந்தார்கள். அன்னாரின் தாயார் கூறுகின்றார்கள்; நீங்களும் வக்ஃபே நவ் ஆவீர்கள். உங்களுடைய இரண்டு சகோதரர்கள் முரப்பி ஆகிவிட்டார்கள். நீங்கள் ஆகவில்லை. என்று அவரிடம் நான் கூறும்போது, நான் அவர்களுக்குத் தொண்டாற்றுகிறேன். அல்லாஹ் என்னுடைய இந்த தொண்டையும் ஓரளவு ஏற்றுக் கொள்ளவே செய்வான். நான் மற்ற குடும்பத்திற்காக, வீட்டிற்காக பணிபுரிகிறேன் என்று பதிலளிப்பார். ஏனென்றால் முழு வீட்டையும் விவசாயம் மூலமாகவும் தனது பணி மூலமாகவும் அவர் கவனித்து வந்தார். அனைவரையும் பொருளாதார ரீதியில் கவலையற்றவர்களாக ஆக்கியிருந்தார்.

இப்பொழுது குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயிதாகத் தொண்டாற்ற நல்வாய்ப்பு பெற்று வந்தார்கள். அல்லாஹ்வின் அருளினால் வஸிய்யத் அமைப்பிலும் இணைந்திருந்தார்கள். மிகவும் நெருங்கிப் பழகுபவராகவும் அன்பு செலுத்தக்கூடியவராகவும் இருந்தார்கள்.

எவரை சந்தித்தாலும் தன்னவர் என்ற உறவை ஏற்படுத்திக் கொள்வார்கள். அன்னாரை அறிந்திருந்த அஹ்மதி அல்லாதவர்களும் பெரும் அநீதியிழைக்கப்பட்டுள்ளது என்று தான் கூறியுள்ளார்கள். ஆனால் தீவிரவாதிகளான முல்லாக்களுக்கு முன்னால் பேசுவதற்கு யாருக்கும் தைரியம் இல்லை. பாகிஸ்தானில் முற்றிலும் மௌனமாக இருப்பது ஒழுக்கமாகிவிட்டது. எவ்வாறு இருப்பினும் மர்ஹூமைப் பற்றி அன்னாருடைய சகோதரர்களும் உறவினர்களும் கூறியுள்ளார்கள்: கிலாஃபத் மீது அளவு கடந்த நேசம் இருந்தது. எவ்வித பாகுபாடுமின்றி தேவையுடைய அஹ்மதிகளுக்கும், அஹ்மதி அல்லாதவர்களுக்கும் உதவி செய்து வந்தார்கள்.

விருந்தோம்பல் அன்னாரிடம் பளிச்சென தெரியும் பண்பாக இருந்தது. குறிப்பாக தலைமையக விருந்தாளிகளுக்கு சேவை செய்வதில் முன்னணியில் இருந்து வந்தார்கள். அன்னாருடைய குடும்பத்தில் நெருக்கமான அனைவரும் எழுதியுள்ளார்கள். மிகவும் துணிச்சல் வாய்ந்தவராக இருந்தார்கள். மிகவும் வீரமான இளைஞர் என்று அறியப்பட்டு வந்தார்கள். கடந்த காலத்திலும், எதிரிகள் தரப்பிலிருந்து ஷஹீது மர்ஹூம் அவர்களை இரு பெருநாள் சந்தர்ப்பங்களில் பயங்கரவாதத்திற்கு இலக்காக்கியுள்ளார்கள்.

ஷஹீது மர்ஹூம் விட்டுச் சென்றவர்களில் தந்தையார் அவ்காடா மாவட்டத்தின் எல் பிளாட் ஜமாஅத்தின் தலைவரான மாஸ்டர் முனவ்வர் சாஹிப் மற்றும் தாயார் ஷம்ஷாத் கோசர் சாஹிபா ஆகியோர் மட்டுமின்றி மர்ஹூமின் துணைவியார் ஃபர்ஸானா இரம் சாஹிபாவும் உள்ளார்கள். மூன்று சிறுபிள்ளைகளும் உள்ளனர். கமர் இஸ்லாம் ஆறு வயது. பதர் இஸ்லாம் நாலரை வயது ஆகியோரை தமது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். ஷஹீது மர்ஹூம் அவர்களுக்கு நான்கு சகோதரர்களும் உள்ளனர். அவர்களில் ஸஹூர் இலாஹி தவ்கீர் சாஹிப் ஜமாஅத்தின் முரப்பி ஆவார். ரீசர்ச் செல்லில் உள்ளார். ஹாஃபீஸ் அன்வார் அஹ்மது சாஹிப் ஜமாஅத்தின் முரப்பி ஆவார். இவரும் பாகிஸ்தானில் உள்ளார்.

இவர்கள் மட்டுமின்றி இன்னும் இரண்டு சகோதரர்கள் உள்ளனர். ஒருவர் லண்டலிலும் மற்றொருவர் ரப்வாவிலும் உள்ளனர். மூன்று சகோதரிகள் உள்ளனர். அவர்களில் ஒரு சகோதரி இங்கு யூகேவில் மான்செஸ்டரில் ஸீஷான் காலித் சாஹிப் அவர்களின் மனைவி ஆவார். ஒரு சகோதரி குவைத்திலும் மூன்றாவது சகோதரி லண்டனிலும் உள்ளார். அல்லாஹ் ஷஹீது மர்ஹூம் அவர்களின் அந்தஸ்தை உயர்த்துவானாக. ஜன்னத்துல் ஃபிர்தவ்ஸில் உயர்ந்த இடத்தைத் தந்தருள்வானாக. ஷஹீது அவர்களின் அப்பாவி குழந்தைகள், மனைவி, பெற்றோர் மற்றும் பின்விட்டுச்சென்ற அனைவருக்கும் அல்லாஹ் பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக.

அப்பாவி குழந்தைகளுக்கு முன்பாக அவர்களின் தந்தை ஷஹீதாக்கப்பட்டது அந்தக் குழந்தைகளின் மனநிலை என்னவாக இருக்கும்! உணர்வுகள் என்னவாக இருக்கும்! என்பதை அல்லாஹ்தான் அறிவான். அன்னாரின் மூத்த மகன் ஆறுவயதுடையவன். சற்று நினைவு தெரிந்தவன். அவன் தற்போது யாருடனும் பேசாமல் சோகமாக இருப்பதாக கூறுகிறார்கள். அல்லாஹ்தான் அவர்களுக்கு பொறுமையும் மனநிம்மதியும் வழங்கமுடியும். அல்லாஹ் சுயமே இந்தப் பிள்ளைகளை பாதுகாப்பானாக.

எதிரிகளுக்கும் கடுமையான தண்டனைகளை வழங்குவானாக.

இரண்டாவது நற்குறிப்பு ஃபைஸலபாத்தைச் சேர்ந்த ஷேக் சயீதுல்லாஹ் சாஹிப் அவர்களின் மகன் அன்பிற்குரிய ஸுல்ஃபிகார் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் மர்ஹூம் ஆஸர்பாயிஜான் சென்றிருந்தார்கள். மர்ஹூம் 36 வயதில் இதயத் துடிப்பு நின்றதன் காரணமாக அங்கு ஹோட்டலில் மரணமடைந்துவிட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னாரின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி மர்ஹூம் அவர்களின் தந்தை வழி முப்பாட்டனார் ஹஸ்ரத் ஷேக் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் அவர்கள் மூலமாக வந்தது. அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஷேக் ஜன்டா சாஹிப் அவர்களின் மகனாவார்கள். ஹஸ்ரத் ஷேக் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் அவர்களுக்கு காதியானில் உள்ள மஸ்ஜிது முபாரக் பக்கத்தில் மளிகை கடை இருந்தது. பைஅத் செய்த பிறகு அன்னார் காதியானுக்கு அருகிலேயே இருந்த தவகுல் வாலா என்ற இவர்களுடைய கிராமத்திலிருந்து ஹிஜ்ரத் செய்து காதியான் வந்துவிட்டார்கள்.

ஒருமுறை ஒரு நபர் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் மவ்லானா நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்களிடம் மஸ்ஜிதிற்கு பக்கத்தில் கடை இருக்கக் கூடாது என்று முறையிடும் வடிவில் கூறினார். ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்கள் ஹஸ்ரத்

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் இதைப் பற்றி கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், இவர் திண்ணைத் தோழர் ஆவார் என்று கூறினார்கள்.

(அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 10, பக்கம் 187-189)

இந்த திண்ணைத் தோழர்களுக்கு அல்லாஹ் எத்தகைய வசதிகளை வழங்கினான் என்றால் எல்லா விதத்திலும் அவர்களுக்கு வசதிகளை வழங்கினான். அவர்களின் குடும்பத்தையும் அதிகரித்தான். மர்ஹூம் அவர்கள் 2005-ல் மான்செஸ்டர் பல்கலை கழகத்திலிருந்து டெக்ஸ்டைல் துறையில் B.Sc., ஹார்னர் பட்டம் பெற்றார்கள். அதற்குப் பிறகு குடும்பத் தொழிலை பார்ப்பதில் மூழ்கிவிட்டார்கள். உலகில் மிகவும் உச்சக்கட்ட முன்னேற்றத்தை அடைந்தும் கூட பணிவு மற்றும் தன்னடக்கத்திற்கு உதாரணமாக இருந்தார்கள். எல்லா வகையான மக்களையும் சந்தித்து நன்றாக பழகிவந்தார்கள். ஒவ்வொருவரிடமும் மிகவும் மதிப்புடனும் கண்ணியத்துடனும் நடந்து கொண்டார்கள். அன்னார் ஒவ்வொருவருடனும் தனது நண்பர்கள் மற்றும் சகோதரர்களைப் போன்று நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். ஊழியர்களையும் நன்றாக கருத்தில் கொண்டார்கள். அவர்களுடன் மிகவும் பரிவுடன் நடந்து வந்தார்கள். ஸதகா மற்றும் தான தருமங்கள் செய்வதில் மிக அதிகமாக பங்கெடுத்து வந்தார்கள். பிறகு அன்னார் மருத்துவமனை போன்ற ஈகைப் பணிகளிலும் பங்கெடுத்து வந்தார்கள். ஜமாஅத் சந்தாவில் எல்லா நிதியிலும் பங்கு எடுப்பார்கள். இன்னும் கூறப்போனால் செகரட்டரி மால் அவர்களுக்கு, என்னிடம் சந்தா வாங்குங்கள். மேலும் எல்லா சந்தாவைப் பற்றியும் தெரிவித்து என்னிடம் சந்தா வாங்குங்கள் என்று ஞாபகப்படுத்துவார்கள். மனிதம் முதலில் என்ற அமைப்பின் பணிகளில் அன்னார் அதிகமாக பங்கு எடுத்துள்ளார்கள். மக்களுக்கு வீடு கட்டி தந்துள்ளார்கள். ஏழைகளின் திருமணங்களை அன்னாரே நடத்தி வைத்தார்கள். எவரையாவது சந்தித்தால் நல்ல விஷயங்களை கற்றுக் கொள்ள முயற்சி செய்வார்கள். தமது வாழ்வில் அதை நடைமுறைப்படுத்த முயற்சி செய்வார்கள். குறிப்பாக ரமலானில் அதிகமாக தொண்டு செய்வார்கள். மர்ஹூம் மற்றும் அவர்களின் பெற்றோர் பேரீஸில் ஒரு பள்ளிவாயிலையும் கட்டியுள்ளார்கள். இது மிகப் பெரிய திட்டமாக இருந்தது. அல்லாஹ்வின் அருளினால் அங்கு ஒரு பள்ளிவாயில் கட்டப்பட்டுள்ளது. அன்னாரின் தொழுகையைப் பற்றியும் எழுதப்பட்டுள்ளது. பணியை நிறுத்திவிட்டு தொழுகைக்காக நேரத்தை ஒதுக்குவார்கள். திருக்குர்ஆன் ஓதுவதை தமது வாழ்வில் தொடர்ச்சியாக ஆக்கி மேற்கொண்டு வந்தார்கள். பள்ளிவாயில்களில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டபோது வீட்டில் ஜமாஅத்தான தொழுகைக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அன்னார் மலேசியாவிற்கு சிறிது காலம் சென்றிருந்தார்கள். ஜமாஅத்தின் பள்ளிவாயிலில் ஜமாஅத் மக்களை போலீஸ் பிடித்தபோது அன்னாருக்கு சிறிது காலம் இறைவழியில் சிறைவாசம் செல்லும் நற்பேறு கிடைத்தது. மர்ஹூம் பின்விட்டுச் சென்றவர்களில் மனைவி மற்றும் இரண்டு குழந்தைகள் மட்டுமல்லாமல் பெற்றோரும் ஐந்து சகோதரர்களும் ஒரு சகோதரியும் உள்ளனர். அன்னாரின் தாயார் ஆஸிஃபா சயீதா சாஹிபா ஃபைஸலாபாத் மாவட்டத்தின் லெஜ்னா தலைவி ஆவார்கள். அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் பொறுமையையும் மனதைரியத்தையும் தந்தருள்வானாக.

டாக்டர் ஹாமித் மஹ்மூத் சாஹிப் மர்ஹூமைப் பற்றி எழுதுகின்றார்கள்:

அஹ்மதிய்யத்துடன் குறிப்பாக கிலாஃபத்துடன் பற்று மற்றும் அன்பான தொடர்பு இருந்தது. தமது சமூக, அரசியல் மற்றும் நிர்வாக தொடர்புகள் மூலம் மக்களுக்கு உதவ முயற்சி செய்து வந்தார்கள்.மேலும் யாருக்கு உதவி தேவைப்படுகிறதோ அவர்களுக்கு அதிகமாக தொண்டாற்றுவதை தமது கடமையாக கருதி வந்தார்கள். ஒருவரை துன்பத்தில் கண்டு மௌனமாக அவருக்கு உதவுவதையும் கடமையாக கருதி வந்தார்கள். சிறிதும் சத்தமில்லாமல் எவ்வித பகட்டும் இல்லாமல் அன்னார் பணியாற்ற முயற்சி செய்து வந்தார்கள்.

டாக்டர் மசூது அல் ஹஸன் நூரீ சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்:

ஸுல்ஃபிகார் மிகவும் நல்லவராகவும் நேர்மை மற்றும் உண்மையான அஹ்மதி இளைஞராக இருந்தார். நான் அவரை சந்தித்த கணத்தில் இருந்து அவருடைய சிறப்புகளை அறிந்து கொண்டேன். மனிதம் முதலில் அமைப்பின் திட்டங்களில் மிக அதிகமாக பொருள் தியாகம் செய்யக் கூடியவராக இருந்தார். தியாக உணர்வு மற்றும் வள்ளல் தன்மையின் தரம் மிகவும் உயர்ந்திருந்தது. பற்பல லட்சங்கள் கொடுத்து வந்தார்கள். அத்துடன் எளிமையையும் தன்னடக்கத்தையும் வெளிப்படுத்தி வந்தார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரது பெற்றோருக்கும் பொறுமையையும் மனதைரியத்தையும் வழங்குவானாக. பிள்ளைகளைத் தானே பாதுகாப்பானாக. அன்னாருடைய நற்செயல்களைத் தொடரச் செய்ய நற்பேறு வழங்குவானாக.

மூன்றாவது நற்குறிப்பு கனடாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய மலிக் தபஸ்ஸும் மக்ஸூத் சாஹிப் அவர்களுடையது. அன்னார் கடந்த நாட்களில் மரணமடைந்துவிட்டார்கள். إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னாருடைய தந்தையார் மலிக் மக்ஸூத் அஹ்மத் சாஹிப் மே 28, 2010 இல் தாருஸ் திக்ர் லாஹூரில் நடைபெற்ற தாக்குதலில் ஷஹீதாகி விட்டார்கள். அன்னாருடைய தந்தை மலிக் மக்ஸூத் அஹ்மது சாஹிப் அவர்களின் தாய்வழிப் பாட்டனார் போபாலைச் சேர்ந்த ஹஸ்ரத் மலிக் அலீ பக்ஷ் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் லெக்சர் சியால்கோட் என்ற நூலைக் கேட்டு பைஅத் செய்ய எண்ணம் கொண்டார்கள். மலிக் தபஸ்ஸும் மக்ஸூத் சாஹிப் அவர்கள் 1991 ஆம் ஆண்டு தமது வாழ்வை அர்ப்பணித்தார்கள்.

2006 ஆம் ஆண்டு அன்னாருக்கு நஸாரத் உமூரே ஆமா பணி வழங்கப்பட்டது. அங்கு அன்னார் உமூரே ஆமா துணை நாஸிராக தொண்டாற்ற நற்பேறு பெற்றார்கள். பிறகு 2011 இல் அன்னார் தஹ்ரீகே ஜதீதின் சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டார்கள். 2016 ஆம் ஆண்டு ஷஹீதுகளின் குடும்பங்களுடன் என்னுடைய அனுமதியுடன் அன்னார் கனடா சென்றுவிட்டார்கள். முதலில் செல்ல விரும்பவில்லை. ஆனால் நான் கூறியதனால் சென்றுவிட்டார்கள். கனடாவிலும் அன்னார் உமூரே ஆமா மற்றும் ஜாயிதாத் துறையில் தொண்டு ஆற்றியது மட்டுமின்றி தாருல் கஸா நாஸிம் ஆகவும் பணியாற்றும் நற்பேறு பெற்றார்கள்.

மர்ஹூம் தொழுகை மற்றும் நோன்பு ஆகியவற்றைப் பேணக்கூடியவராகவும் தஹஜ்ஜுதை முறையாக தொழுது வருபவராகவும் திருக்குர்ஆன் மீது ஆழ்ந்த பற்று கொண்டவராகவும் கிலாஃபத்துடன் ஆழ்ந்த நன்றியுணர்வு கொண்டவராகவும் காலத்தின் கலீஃபாவின் குரலுக்கு செவிசாய்க்கக் கூடியவராகவும் இருந்தார். மிகவும் நல்ல மற்றும் அனுதாபம் காட்டக்கூடிய மனிதராகவும் இருந்தார். அன்னார் பின்விட்டுச் சென்றவர்களில் தாயார், மற்றும் துணைவியார் மட்டுமின்றி ஒரு மகனும் மூன்று மகள்களும் உள்ளனர். அன்னாருடைய ஒரு மகன் டாக்டர் அத்ஹர் ஆவார். இவர் அன்னாரின் ஒரே மகன் ஆவார். டாக்டர் அத்ஹர்

அஹ்மது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் ஆவார். அன்னாருடைய மருமகன் உமர் ஃபாருக் சாஹிப் அவர்களும் ஜமாத்தின் முரப்பி ஆவார்கள். மர்ஹூம் லாஹூர் மாவட்டத்தின் அமீர் சாஹிப் அவர்களின் மருமகன் ஆவார்கள்.

மர்ஹூமின் மகள் ரஸியா தபஸ்ஸும் எழுதுகின்றார்கள்;

தப்லீக் செய்வதற்கான அதிக ஆர்வம் இருந்தது. ஒரு முறை இரவு நேரத்தில் தப்லீக் செய்வதற்காக வெளியேறினார்கள். அங்கு அன்னார் மீது வாலிபர்கள் தாக்குதல் நடத்திவிட்டார்கள். எவ்வாறு இருப்பினும், அன்னார் அவர்களிடமிருந்து தப்பிவிட்டார்கள். ஆனால் அந்த சண்டையில் அன்னாரின் கண்ணில் ஒரு குத்து விழுந்தது. கண் காயம் அடைந்தது. மிகவும் கஷ்டப்பட்டு வீட்டிற்கு வந்தார்கள். ஆனால் யாரிடமும் அதைப் பற்றி கூறவில்லை. பல வருடங்களுக்கு பிறகு கண்ணில் மீண்டும் வலி ஏற்பட்டபோது மருத்துவரை அணுகினார்கள். இது பழைய காயத்தின் பாதிப்பாகும் என்று மருத்துவர் கூறினார்.

அப்போதுதான் இப்படி ஒரு சம்பவம் நடந்தது என்று அன்னார் கூறினார்கள். எவ்வாறு இருப்பினும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தியை எட்ட வைத்ததினால் தனக்கு பார்வைக் குறைவு ஏற்பட்டது என்ற விஷயத்தில் மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

மலிக் தாஹிர் அஹ்மத் சஹிப் எழுதுகிறார்கள்: தபஸ்ஸும் மக்ஸூத் அவர்கள் சிறுவயதிலிருந்தே நன்மையின் பக்கம் சாய்ந்திருந்தார்கள். கிளை அமைப்புகள் மற்றும் ஜமாஅத் அமைப்பின் கீழ் தொண்டாற்றி வந்தார்கள். கிலாஃபத்துடன் ஆழமான தொடர்பும், ஜமாஅத் அமைப்பிற்கு கட்டுப்படுதலும் அன்னாரின் சிறப்பாக இருந்தது. மிகவும் எளிய இயல்புடையவராகவும் அல்லாஹ்வின் மீது தவக்குல் கொண்டவராகவும் இருந்தார்கள். பிள்ளைகளுக்கு மிகவும் உயர்தரமான தர்பிய்யத் வழங்கினார்கள். மேலும் அவர்களுக்கு கிலாஃபத் மற்றும் ஜமாஅத் அமைப்புடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்துவதற்கு மிகவும் அதிகமாக முயற்சி செய்தார்கள்.

நாயிப் வகீலுல் மால் சானீ ஹாஃபிஸ் முஹம்மது அக்ரம் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: எனக்கு அன்னாருடன் பழைய தொடர்பு உள்ளது. அண்டை வீட்டார் என்ற தொடர்பும் இருந்தது. மிகவும் கலப்படமற்ற, நன்றியுணர்வுள்ள, எந்நேரமும் மார்க்கத் தொண்டு செய்யும் உணர்வால் நிறைந்த, கிலாஃபத் மீது பித்து கொண்ட மனிதராக இருந்தார். இறைவன் மீது அன்னாருக்கு முழுமையான நம்பிக்கை இருந்தது. ஒரு முறை ஒரு நபருக்கு இறை ஞானத்தை பற்றி புரிய வைத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது இறைவன் மீதான அன்பு மற்றும் மகத்துவத்தின் காரணமாக அன்னாரின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து ஓடுவதை நான் கண்டேன்.

மேலும் தொடரந்து அன்னார் எழுதுகின்றார்கள்; அவருடன் பணியாற்றிய ஊழியர் ஒருவர் என்னிடம் இவ்வாறு கூறினார். யார் என்ன செய்கிறார்கள் என்று பார்க்காதீர்கள். யார் கூறுவதையும் கேட்காதீர்கள். உங்களுடைய ஈமானை பாதுகாத்துக் கொள்ளுங்கள். கிலாஃபத்தை விட்டுவிடாதீர்கள். இதை தவிர்த்து எங்குமே அமைதி இல்லை. இது என்னுடைய அறிவுரையாகும் என்று என்னிடம் அன்னார் கூறுவார்கள்.

குத்தாமுல் அஹ்மதிய்யாவில் இருந்த காலத்திலிருந்து ஜமாஅத்துடன் மிகவும் ஆழமான தொடர்பு இருந்தது. தனது உயிர், பொருள், நேரம் மற்றும் கண்ணியம் ஆகிய அனைத்துடனும் எப்பொழுதும் முன்னிலை வகித்தார்கள். மிகவும் சுறுசுறுப்பான இளைஞராக இருந்தார்கள். சாதுரியமானவராக இருந்தார்கள். உடல் வலுவானவராகவும் மிக உயரமானவராகவும் இருந்தார்கள். விளையாட்டு வீரராக இருந்தார்கள். இவ்வாறு தனது அனைத்து திறமைகளையும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்காக செலவழித்து வந்தார்கள். சிறுவயதிலேயே உச்ச நீதிமன்றத்தில் பயிற்சி பெறுவதற்கான லைசென்ஸும் அவருக்கு கிடைத்திருந்தது. பலவகையான பணிகளை செய்து முடிப்பதில் அசாதாரணமான அனுபவமும் திறமையும் அவருக்கு இருந்தது. உலக பயணங்களையும் மேற்கொண்டு வந்திருந்தார்கள். தமது நிலைமையில் மட்டுமே இருக்கவில்லை. ஆனால் எப்போதும் பணிவு இருந்தது. அன்னாரிடம் ஒருபோதும் சுயநலம் உருவாகவில்லை. எந்த ஆணவமும் இருக்கவில்லை. அல்லாஹ் அன்னாருக்கு பாவமன்னிப்பு வழங்கி கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாருடைய சந்ததிகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடர்வதற்கான நற்பேறு வழங்குவானாக.

தமிழாக்கம் : மவ்லவி அதாவுல் முக்னி

* * * * * * *

**(மல்ஃபூஸாத்... முதல் பக்கத் தொடர்ச்சி)**

إِنَّمَا يَتَقَبَّلُ اللّٰهُ مِنَ الْمُتَّقِيْنَ (அல்மாயிதா:28)

அல்லாஹ் இறையச்சமுடையவர்களின் துஆக்களை ஒப்புக் கொள்கிறான். இறையச்சம் இல்லாத மக்கள் துஆக்கள் ஒப்புக்கொள்ளப்படுதல் என்ற ஆடையிலிருந்து நிர்வாணமாக உள்ளனர். ஆம் அல்லாஹ்வின் ருபூபிய்யத் மற்றும் ரஹ்மானியத் (எனும் பண்புகள் இறைச்சம் உடைய) அந்த மக்களின் பராமரிப்பில் தனது பணியை செய்கின்றன.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 377)

**(தஃப்ஸீரே கபீர்... முதல் பக்கத் தொடர்ச்சி)**

ஒவ்வொரு கூட்டிலும் ஒரு ராணித் தேனீ இருக்கின்றது. அனைத்து தேனீக்களும் அதனை பின்தொடர்கின்றன. அவற்றின் சந்ததிகள் தனித் தனியாக இருக்கின்றன. மனிதர்களைப் போன்று அவை அனைத்தும் இணைந்து வசிப்பதில்லை. புதிய ராணித் தேனீ பிறக்கும்போது பழைய தேனீக்கள் அதனை கொல்ல விரும்புகின்றன. அப்போது அனைத்து இளம் தேனீக்களும் அதற்கு பாதுகாப்பு கொடுக்கின்றன. மேலும் இணைந்து அதனை பாதுகாக்கின்றன. அந்த ராணித் தேனீ வளர்ந்து பெரிதாகி தனது தோழர்களுடன் சேர்ந்து தனியாக தனது கூட்டை கட்டிக் கொள்கிறது. பின்னர் ராணித் தேனீ சண்டையிட்டு ஒன்று பழைய பெரிய தேனீக்களை முந்தைய கூட்டிலிருந்து வெளியேற்றி விடுகின்றது அல்லது தோல்வியுற்று வேறு இடத்திற்கு சென்றுவிடுகிறது. அவற்றின் அமைப்பின் மேற்படி விளக்கங்கள் ஆச்சரியமளிக்கக்கூடியதாக உள்ளன. தேனீக்களுக்கு இந்த அறிவை கொடுத்த மற்றும் அந்த தேனீக்கள் சுயமே சிந்தித்திடாத அமைப்பை வழங்கிய ஓர் உயர்வான இறைவன் இருக்கின்றான் என்பதை தெரிவிக்கவே இறைவன் தேனீக்களின் குறிப்பை (திருக்குர்ஆனில்) தேர்ந்தெடுத்துள்ளான். மேலும் அதன் உதாரணத்தை ஏன் வழங்கியுள்ளான் என்றால் தேனீக்களின் அமைப்பு ஒரு சாதாரண சிந்தனையின் மூலமே தென்பட்டுவிடுகிறது. அதிலிருந்து உருவாகும் உணவை மனிதன் சிறந்ததாக கருதுவதாலும் அதன் குறிப்பு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேலும் அதனிடத்தில் அறிவு உள்ளது என்பதை அதில் காணப்படும் அமைப்பு புலப்படுத்துகிறது. ஆயினும் அது ஒரே நிலையில் இருப்பதும், முன்னேற்றம் அடையமுடியாமலிருப்பதும் அந்த அமைப்பை வேறு ஒரு இருப்பு வழங்கியுள்ளது என்பதையும் வெளியிலிருந்து வந்தது என்பதையும் எடுத்துரைக்கிறது.

நஹ்ல் அதாவது தேனீக்களிலும் பல வகைகள் உள்ளன என்பதன் பக்கமும் இந்த வசனத்தில் கவனமூட்டப்பட்டுள்ளது. சில (வகை தேனீக்கள்) மலைகளில் கூடுகட்டுகின்றன. சில மைதானங்களிலுள்ள மரங்களிலும் சிலவை வீடுகள் அல்லது திராட்சை போன்றவற்றிற்காக உருவாக்கப்படும் கொடிகளில் கூடுகட்டுகின்றன. மனிதர்களுக்கு வஹி இறங்கும் இடம் ஒன்றாக இருப்பதில்லை. சிலரின் அந்தஸ்து மலையாக இருக்கிறது. சிலருக்கு மரத்தடியில். அதாவது சிலர் மிக உயர் அந்தஸ்தில் இருக்கின்றனர். சிலர் அதைவிட குறைவான அந்த அந்தஸ்திலும் சிலர் அதைவிட குறைவான அந்தஸ்திலும் இருக்கின்றனர். ஆக, அரபி.... (இவர்களே அத்தூதர்கள். நாம் இவர்களுள் சிலருக்கு, மற்றவர்களை விட மேன்மையை வழங்கியுள்ளோம் (2:254) என்ற வசனத்தில் இதே கருத்தின் பக்கமே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4-பக்கம் 194 காதியான் பதிப்பு 2010)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 23 June 2022 Issue No. 25

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)


# ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜெர்மனி சுற்றுப் பயணம் - 2013

**(சென்ற இதழின் தொடர்ச்சி)**

**வாகிஃபாத்தே நவ் பிள்ளைகளுடனான சந்திப்பு**

ஹுஸூர் அன்வர் [அய்யதஹுல்லாஹ்] அவர்கள் பரிவுகூர்ந்து வாகிஃபாத்தே நவ் பெண் பிள்ளைகளுக்கு கேள்வி கேட்பதற்கு அனுமதி நல்கினார்கள்.

**கேள்வி** : அன்றாடம் ஸதகாவிற்காக சேமித்து வைத்த தொகை அதிகமாக சேர்ந்துவிட்டால் அதனை எங்கு பயன்படுத்த வேண்டும்? என்று ஒரு வாகிஃபா கேட்டார்.

**பதில்** : மிக நல்ல பழக்கம் அகும். தினமும் ஸதகா எடுத்து வைக்கின்றாய். கொடுப்பதற்கு யாருமே கிடைக்கவில்லையென்றால் பின்னர் மாதக் கடைசியில் ஓரிடத்தில் கொடுத்து விடுங்கள். ஜமாஅத்தின் ஸதகாக்களில் செலுத்தி விடுங்கள். சரியாக பயன்படுத்துகின்றனர் என்று எந்த தொண்டு நிறுவனத்தைக் குறித்து தெரியுமோ அங்கு கொடுத்துவிடுங்கள். save the children என்ற தொண்டு நிறுவனம் உள்ளது. இன்னும் ஏராளமான தொண்டு நிறுவனங்கள் உள்ளன.

மர்யம் ஃபண்டில் நன்கொடையாக கொடுங்கள். ஸதகாவாக கொடுக்காதீர்கள். ஸதகாவை ஏழைகளுக்க கொடுங்கள். மேலும் பல்வேறு இடங்களில் கொடுக்கலாம். தினம் தினம் ஸதகாவை எடுத்து வைப்பது மிக நல்ல விஷயம் ஆகும். அப்படி எடுத்து வைக்க வேண்டும். நானும் தினமும் எடுத்து வைக்கின்றேன். பின்னர் ஒன்று சேர்த்து யாருக்காவது கொடுத்து விடுகிறேன்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள் :

நோயாளிகளுக்கு உதவித் தொகையாக கூட அதனை கொடுக்கலாம். ஆஃப்ரிக்காவில் நமது ஏராளமான நோயாளிக்கான ஃபண்ட் உள்ளது. அவற்றில் ஸதகா கொடுக்கலாம். மனிதம் முதலில் என்ற அமைப்பில் கொடுக்கலாம். அவற்றை சேமித்து வாருங்கள். அவர்களுக்கு தேவைப்படுகின்றது. ஜெர்மனி மக்கள் மனிதம் முதலில் அமைப்பின் மூலம் பெனினில் அனாதை இல்லத்தை நடத்தி வருகின்றனர். பின்னர் சில மருத்துவமனைகளையும் திறந்து வருகின்றனர். எனவே அங்கு (அந்த தொகை) உதவியாக இருக்கும். இன்னும் கூறப்போனால் அங்கு தொடர் ஸதகாவாக அமைந்துவிடும். இவ்வாறு அனாதை இல்லம் மற்றும் மருத்துவமனைகளுக்காக கொடுக்கப்படும் ஸதகா எப்படிபட்டதாக அமைகின்றது என்றால் உங்கள் பணம் ஒரு முறை அங்கு கொடுக்கப்படுகிறது. ஆனால் அந்த பணிகள் நிரந்தரமாக நடைபெறுவதாலும் அதிலிருந்து படைப்பினங்களுக்கு சேவை நடைபெறுவதாலும் அது தொடர் ஸதகா என்று கூறப்படுகின்றது. அங்கு உங்கள் பெயர் வந்துவிடும். வெளிப்படையாக இல்லாவிட்டாலும் அல்லாஹ்வின் பட்டியலில் நிச்சயம் வந்துவிடும்.

**கேள்வி** : ஹுஸூர் (அய்யதகுமுல்லாஹ்) தாங்கள் முதல் குத்பா மற்றும் இரண்டாவது குத்பாவிற்குமிடையில் இடைவெளி எடுத்து அமர்கின்றீர்கள் எதற்காக? என்று ஒரு வாகிஃபா கேட்டார்.

**பதில்** : இது சுன்னத் ஆகும். சுன்னத்தின் படி செய்யப்படுகின்றது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வழங்கி வந்த குத்பா சானியா மஸ்னூன் குத்பா என்று கூறப்படுகின்றது. குத்பாவின் முதல் பகுதியில் மக்களின் தஃலீம், தர்பிய்யத்திற்காக கூறவேண்டிய விஷயங்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறிவந்தார்கள். அதன் பிறகு சிறிது நேரத்திற்காக அன்னார் (ஸல்) அவர்கள் அமர்ந்து வந்தார்கள். பின்னர் எழுந்து நின்று குத்பா சானியா ஓதிவந்தார்கள். அல்லாஹ்வின் வசனங்கள் இந்த குத்பா சானியாவின் அடித்தளமாக அமைந்துள்ளது. இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நடைமுறையாக இருந்தது.

ஒரு வாகிஃபா தனது இரண்டரை வயது குழந்தை தொடர்பாக வழிகாட்டல் வேண்டினார். அவர் கூறினார். (எனது) மகன் மிகவும் Hyper ஆவான். பேச்சை கேட்பதில்லை.

அப்போது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

சாக்லேட் சாப்பிடும் போது Hyper-ஆகிவிடுகிறான். Hyper-ஆக இருந்தால் என்ன? ஆக்டிவாக இருப்பான். இன்றைய நாட்களில் பிள்ளை கொஞ்சம் ஆக்டிவ் ஆகிவிட்டால் குழந்தை Hyper-ஆகிவிட்டான் என்று மக்கள் தாயிடம் கூறிவிடுகின்றனர். இன்றைய நாட்களில் இந்த கஷ்டம் ஏற்பட்டுள்ளது. Hyper-ஆகிவிட்டால் அதனால் என்ன ஆகிவிட்டது? பிள்ளை நல்ல இன்டலிஜன்ட் ஆக இருக்கின்றான். பெரியவனாகி இன்டலிஜன்டாக வெளிப்படுவான். இன்ஷாஅல்லாஹ்.

அப்போது பேச்சைக் கேட்பதில்லை என்று அந்த வாகிஃபா கூறினார்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்:

நீங்கள் எப்போது பேச்சை கேட்டு நடந்து வந்தீர்கள்? நீங்கள் பேச்சைக் கேட்டு நடந்தீர்களா என்று உங்களைக் குறித்து உங்கள் பெற்றோரிடம் கேட்டுப் பாருங்கள். யாராவது ஒருவருடைய கேரக்டர் அவனிடம் வந்திருக்கும்.

பேச்சை கேட்பதில்லை என்பதெல்லாம் ஒரு விஷயம் அல்ல. குழந்தைகளிடம் அவர்களின் உளவியலுக்கு ஏற்ப நடக்க வேண்டும். இந்த வேலை செய்யக் கூடாது என்று ஒரு முறை கூறிவிட்டால் அவன் அழுகின்றான். கத்துகின்றான். பொருட்களை இங்கும் அங்கும் தூக்கி வீசுகின்றான். அதன் பிறகு நீங்கள் அவன் பேச்சை ஏற்றுக் கொண்டுவிடுகிறீர்கள். அப்போது அவன், அடம்பிடி, கூச்சலிடு, தூக்கி வீசு. இதுவே உங்களை விஷயத்தை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கு வழிமுறை ஆகும் என்று அவன் புரிந்து கொள்கிறான். இரண்டு முறை நீங்கள் மறுத்துவிட்டால், ஏற்றுக் கொள்ளாவிட்டால் சரியாகிவிடும். அவனது பிடிவாதத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டே சென்றால் பின்னர் அவன் பிடிவாதம் பிடித்துக் கொண்டே செல்வான். பின்னர் நீங்கள் அதனை Hyper என்று கூறிவிடுகின்றீர்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்;

அவர்களது எந்த பேச்சையுமே கேட்கக் கூடாது என்பதும் சரியல்ல. அவன் ஏதாவது ஒன்றை கேட்கின்றான் என்றால் அதனால் அவனுக்கும், மற்றவருக்கும், உங்களுக்கும் எந்த பாதிப்பும் இல்லை என்றால் அதனை கொடுப்பதில் எந்த தவறும் இல்லை. பெற்றோர்கள் மறுத்துவிடுவதன் மூலமும் பிள்ளைகளை பிடிவாதம் பிடிப்பவர்களாக ஆக்கிவிடுகின்றனர். அல்லது ஒவ்வொரு முறையும் பிடிவாதம் பிடிக்கச் செய்து பின்னர் பேச்சை கேட்பதன் மூலமும் அவ்வாறு ஆக்கிவிடுகின்றனர். எனவே முதலில் பிள்ளைகளின் உளவியலை படியுங்கள். அதற்கேற்ப பிள்ளைகளிடம் நடந்து கொள்ளுங்கள்.

இந்த வகுப்பு 12.25 மணிக்கு நிறைவடைந்தது.

தொடரும்..........

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை 5, 12 ஜூலை 2013)

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய்தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A. Basheer Ahmad (Sec. Waqf-e-Jadid, Melapalayam)


O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005**


Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad